# பெரியார் பல்கலைக்கழகம்

பெரியார் பல்கலை நகர்

சேலம் - 636 011

பட்ட வகுப்பு - கலையியல், அறிவியல்

**இரண்டாமாண்டு**

**மூன்றாம் பருவம், நான்காம் பருவம்**

**பகுதி I - தமிழ்**

## செய்யுள் திரட்டு

(**2017-2018** ஆம் கல்வியாண்டு முதல் சேர்க்கை

பெறும் மாணவர்களுக்குரியது)

இந்நூல் கிடைக்குமிடம்:

பதிவாளர்

பெரியார் பல்கலைக் கழகம்

பெரியார் பல்கலை நகர்

சேலம் - 636 011.

# பாடத்திட்டக் குழு (அடிப்படைத் தமிழ்)

## பாடத்திட்டக் குழுத் தலைவர்

மா. ரேச்சல் பிரீடா
தமிழ்த்துறைத் தலைவர்
ஸ்ரீ கணேஷ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
அம்மாபேட்டை,
சேலம் - 14.

## உறுப்பினர்கள்

1. பேரா. வே.தா. தர்மராஜா
உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்,
முதுகலைத் தமிழாய்வுத்துறை,
கந்தசாமிக் கண்டர் கல்லூரி,
(சுயநிதி பாடப்பிரிவுகள்)
வேலூர், நாமக்கல் - 638 182.

2. முனைவர் சு. திருமூர்த்தி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
குமாரபாளையம்.

3. முனைவர் நா. பழனிவேலு,
தமிழ் இணைப் பேராசிரியர் & துறைத் தலைவர்,
அரசு கலைக் கல்லூரி (ஆடவர்),
கிருட்டிணகிரி - 635 001.

4. முனைவர் இரா. புஷ்பவல்லி
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அரசு மகளிர் கலைக் கல்லூரி,
சேலம் - 8.

5. முனைவர் தி. பெரியசாமி
பேராசிரியர் & தலைவர்,
தமிழ்த்துறை,
பெரியார் பல்கலைக்கழகம்,
சேலம் – 11.

6. முனைவர் ஸ்ரீ. உமா
உதவிப் பேராசிரியர் & தமிழ்த் துறைத் தலைவர்,
ஜே.கே.கே. நடராஜா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
குமாரபாளையம் – 638 183.

7. முனைவர் அ. குபேந்திரன்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
சேலம் சௌடேஸ்வரி கல்லூரி,
சேலம் – 636 010.

8. முனைவர் ச. தங்கமணி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
பாரதியார் பல்கலைக்கழகம்,
கோவை – 641 046.

9. முனைவர் B. பத்மநாப பிள்ளை
பேராசிரியர், தமிழ்த்துறை,
காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம்,
காந்திகிராமம்,
திண்டுக்கல் – 624 302.

10. முனைவர் சிற்பி பாலசுப்ரமணியம்
106/50, அழகப்பா லே அவுட்,
பொள்ளாச்சி – 642 001.
போன்: 94430 29736.

11. முனைவர் இரா. தெய்வம்
தமிழ்த்துறைத் தலைவர்,
ஸ்ரீ வித்யாமந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
காட்டேரி, ஊத்தங்கரை,
கிருட்டிணகிரி – 636 902.

# நாட்டு வணக்கம்

வந்தே மாதரம் !
ஸுஜலாம், ஸுபலாம் மலயஜ ஸீதலாம்
ஸஸ்ய ஸ்யாமலாம் மாதரம்
ஸுப்ர ஜ்யோத்ஸ்நா புலகித யாமிநீம்
புல்ல குஸுமித த்ரும தள ஸோபிநீம்
ஸுஹாஸிநீம், ஸுமதுர பாஷிநீம்
ஸுகதாம், வரதாம், மாதரம்!
வந்தே மாதரம்!
வந்தே மாதரம்!

– பங்கிம் சந்திர சட்டர்ஜி

## நாட்டு வணக்கம் : பொருள்

இந்தியத் தாயே,
நின்னை வணங்குகிறோம்!
தூய்மை நீரும் நறுங்கனிச் செல்வமும்
செழும்பூஞ் சோலை மலைகளின் வளமும்
இதமிகு தென்றலுடன் எழில்பசும் தோற்றத்து
இந்தியத் தாயே!
ஒளிநிலவின் அழகில்,
சிலிர்த்திடும் இரவில்
மரங்களின் வண்ண மலர் வனப்புடன்
புளகாங்கிதம் பொங்கச் செய்கிறாய்!
மதுரமொழிப் புன்னகை பூத்து
நல்வாழ்வும் நல்வரங்களும் அருள்கின்ற
அன்னையே,
நின்னை வணங்குகிறோம்!
நின்னை வணங்குகிறோம்!

# தமிழ்த் தெய்வ வணக்கம்

(பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா)

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதில்சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே–உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– மனோன்மணீயம் சுந்தரனார்

# மூன்றாம் பருவம்

# தாள் 3

# காப்பியங்களும் புதினமும்

# பொருளடக்கம்

## மூன்றாம் பருவம் : தாள் 3

## காப்பியங்களும் புதினமும்

### அலகு - 1

### சமணம், பௌத்தம்



| பாடம் | | | பக்கம் |
|---|---|---|---|
| அ. | சிலப்பதிகாரம் | - அடைக்கலக்காதை (முதல் 90 வரிகள் மட்டும்) | 10 |
| ஆ. | மணிமேகலை | - உலக அறவி புக்க காதை | 15 |
| இ. | சீவகசிந்தாமணி | - விமலையார் இலம்பகம் (தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்கள்) | 21 |
| ஈ. | பெருங்கதை | - பதுமாபதியை வஞ்சித்தது. | 31 |



### அலகு - 2

### சைவம், வைணவம், இசுலாம், கிறித்துவம்



| பாடம் | | | பக்கம் |
|---|---|---|---|
| அ. | பெரியபுராணம் | - இளையான்குடி மாறநாயனார் புராணம் | 36 |
| ஆ. | கம்பராமாயணம் | - மந்தரை சூழ்ச்சிப் படலம் | 42 |
| இ. | சீறாப்புராணம் | - விடம் மீட்ட படலம் | 51 |
| ஈ. | தேம்பாவணி | - பைதிரம் நீங்கு படலம் | 63 |

## நான்காம் பருவம் : தாள்-4

# பண்டைய இலக்கியங்களும் நாடகமும்

## அலகு - 1

## சங்க இலக்கியம்


| பாடம் | | | பக்கம் |
|---|---|---|---|
| அ. | நெடுநல்வாடை | - முழுவதும் | 72 |
| ஆ. | குறுந்தொகை | - 8, 16, 25, 163, 186 (5 பாடல்கள்) | 83 |
| இ. | அகநானூறு | - 121, 122, 123 (3 பாடல்கள்) | 86 |
| ஈ. | புறநானூறு | - 47, 50, 73, 82, 85 (5 பாடல்கள்) | 90 |
| உ. | பதிற்றுப்பத்து | - கரைவாய்ப்பகுதி, நல்நுதல் விறலியர், பேரெழில் வாழ்க்கை. | 94 |


## அலகு - 2

## பதினெண்கீழ்க்கணக்கு


| பாடம் | | | பக்கம் |
|---|---|---|---|
| அ. | திருக்குறள் | - வான்சிறப்பு, காதல் சிறப்புரைத்தல் | 98 |
| ஆ. | நாலடியார் | - நட்பாராய்தல் (1-10 பாடல்கள்) | 101 |
| இ. | பழமொழி | - ‘சான்றோர் செய்கை’ முதல் 5 பாடல்கள் | 104 |
| ஈ. | திரிகடுகம் | - 5 பாடல்கள் (91-95) | 106 |
| உ. | இன்னா நாற்பது | - முதல் 10 பாடல்கள் | 108 |

# மூன்றாம் பருவம்

## தாள்-3 : காப்பியங்களும் புதினமும்

## அலகு - 1

## சமணம், பௌத்தம்

## அ. சிலப்பதிகாரம்

### அடைக்கலக் காதை

'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்று பாரதியாரால் சிறப்பிக்கப்பட்ட இந்நூல் தமிழ்மொழியில் தோன்றிய முதல் காப்பியமாகும். இந்நூலை இளங்கோவடிகள் இயற்றியுள்ளார். இவர் சேரன் செங்குட்டுவனின் இளவல் ஆவார். கோவலனோடு கண்ணகி வானுலகம் சென்ற செய்தியைக் குன்றக் குறவர்கள் மலைவளம் காணச் சென்ற செங்குட்டுவனிடம் கூறினர். அச்செய்தியைச் சாத்தனார் விரித்துரைக்க இளங்கோவடிகளும் அதனைக் கேட்டார். முடிவில் சாத்தனார் 'முடிகெழுவேந்தர் மூவருக்கும் உரிய கதை ஆதலால் அடிகள் நீரே அருளுக' என வேண்டினார். அவர் வேண்டுகோளுக்கு இணங்க இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார்.

மூன்று காண்டங்களையும் 30 காதைகளையும் கொண்டது சிலப்பதிகாரம். புகார் காண்டம் 10 காதைகளையும் மதுரைக் காண்டம் 13 காதைகளையும் வஞ்சிக் காண்டம் 7 காதைகளையும் பெற்றுள்ளன. கி.பி. 2ஆம் நூற்றாண்டில் தோன்றிய இந்நூல் சமண சமயத்தைச் சார்ந்தது.

"அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆவதூஉம்
உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்"

சிலப்பதிகாரம் உணர்த்தும் முப்பெரும் உண்மைகளாகும்.

பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள அடைக்கலக் காதையில் கோவலனது சிறப்புகளும், கண்ணகியை ஆயர் முதுமகளாகிய மாதரியிடம் அடைக்கலப்படுத்துவதும் கூறப்பட்டுள்ளன.

# அடைக்கலக்காதை

நிலந்தரு திருவின் நிழல்வாய் நேமி
கடம்பூண் டுருட்டுங் கௌரியர் பெருஞ்சீர்க்
கோலின் செம்மையும் குடையின் தண்மையும்
வேலின் கொற்றமும் விளங்கிய கொள்கைப்
பதியெழு வறியாப் பண்புமேம் பட்ட
மதுரை மூதூர் மாநகர் கண்டாங்கு
அறந்தரு நெஞ்சின் அறவோர் பல்கிய
புறஞ்சிறை மூதூர்ப் பொழிலிடம் புகுந்து
தீதுதீர் மதுரையும் தென்னவன் கொற்றமும்
மாதவத் தாட்டிக்குக் கோவலன் கூறுழித்
தாழ்நீர் வேலித் தலைச்செங் கானத்து
நான்மறை முற்றிய நலம்புரி கொள்கை
மாமறை முதல்வன் மாடலன் என்போன்
மாதவ முனிவன் மலைவலங் கொண்டு
குமரியம் பெருந்துறை கொள்கையிற் படிந்து
தமர்முதற் பெயர்வோன் தாழ்பொழி லாங்கண்
வகுந்து செல் வருத்தத்து வான்றுயர் நீங்கக்
கவுந்தி இடவயிற் புகுந்தோன் தன்னைக்
கோவலன் சென்று சேவடி வணங்க
நாவ லந்தணன் தான்நவின் றுரைப்போன்
வேந்துறு சிறப்பின் விழுச்சீ ரெய்திய
மாந்தளிர் மேனி மாதவி மடந்தை
பால்வாய்க் குழவி பயந்தன ளெடுத்து
வாலா மைந்நாள் நீங்கிய பின்னர்
மாமுது கணிகையர் மாதவி மகட்கு
நாம நல்லுரை நாட்டுது மென்று

தாமின் புறூஉந் தகைமொழி கேட்டாங்கு
இடையிருள் யாமத் தெறிதிரைப் பெருங்கடல்
உடைகலப் பட்ட எங்கோன் முன்னாள்
புண்ணிய தானம் புரிந்தோ னாகலின்
நண்ணுவழி இன்றி நாள்சில நீந்த
இந்திரன் ஏவலின் ஈங்கு வாழ்வேன்
வந்தேன் அஞ்சல் மணிமே கலையான்
உன்பெருந் தானத் துறுதி யொழியாது
துன்ப நீங்கித் துயர்க்கட லொழிகென
விஞ்சையிற் பெயர்த்து விழுமந் தீர்த்த
எங்குல தெய்வப் பெயர்ஈங் கிடுகென
அணிமே கலையார் ஆயிரங் கணிகையர்
மணிமே கலையென வாழ்த்திய ஞான்று
மங்கல மடந்தை மாதவி தன்னொடு
செம்பொன் மாரி செங்கையிற் பொழிய
ஞான நன்னெறி நல்வரம் பாயோன்
தானங் கொள்ளுந் தகைமையின் வருவோன்
தளர்ந்த நடையில் தண்டுகா லூன்றி
வளைந்த யாக்கை மறையோன் தன்னைப்
பாகுகழிந் தியாங்கணும் பறைபட வரூஉம்
வேக யானை வெம்மையிற் கைக்கொள
ஒய்யெனத் தெழித்தாங்கு உயர்பிறப் பாளனைக்
கையகத் தொழித்ததன் கையகம் புக்குப
பொய்பொரு முடங்குகை வெண்கோட் டடங்கி
மையிருங் குன்றின் விஞ்சையன் ஏய்ப்பப்
பிடர்த்தலை இருந்து பெருஞ்சினம் பிறழாக்
கடக்களி றடக்கிய கருணை மறவ

பிள்ளை நகுலம் பெரும்பிறி தாக
எள்ளிய மனையோன் இனைந்துபின் செல்ல
வடதிசைப் பெயரு மாமறை யாளன்
கடவ தன்றுநின் கைத்தூண் வாழ்க்கை
வடமொழி வாசகஞ் செய்தநல் லேடு
கடனறி மாந்தர் கைந்நீ கொடுக்கெனப்
பீடிகைத் தெருவிற் பெருங்குடி வாணிகர்
மாட மறுகின் மனைதொறு மறுகிக்
கருமக் கழிபலங் கொண்மி னோவெனும்
அருமறை யாட்டியை அணுக துஉய்
யாதுநீ யுற்ற இடர்ஈ தென்னென
மாதர்தா னுற்ற வான்துயர் செப்பி
இப்பொரு ளெழுதிய இதழிது வாங்கிக்
கைப்பொருள் தந்தென் கடுந்துயர் களைகென
அஞ்சல் உன்றன் அருந்துயர் களைகேன்
நெஞ்சுறு துயரம் நீங்குக என்றாங்கு
ஒத்துடை அந்தணர் உரைநூற் கிடக்கையில்
தீத்திறம் புரிந்தோள் செய்துயர் நீங்கத்
தானஞ் செய்தவள் தன்னுயர் நீக்கிக்
கானம் போன கணவனைக் கூட்டி
ஒல்காச் செல்வத் துறுபொருள் கொடுத்து
நல்வழிப் படுத்த செல்லாச் செல்வ
பத்தினி யொருத்தி படிற்றுரை எய்த
மற்றவள் கணவற்கு வறியோன் ஒருவன்
அறியாக் கரிபொய்த் தறைத்துணும் பூதத்துக்
கறைகெழு பாசத்துக் கையகப் படலும்
பட்டோன் தவ்வை படுதுயர் கண்டு
கட்டிய பாசத்துக் கடிதுசென் றெய்தி

என்னுயிர் கொண்டீங் கிவனுயிர் தாவென
நன்னெடும் பூதம் நல்கா தாகி
நரக னுயிர்க்கு நல்லுயிர் கொண்டு
பரகதி யிழக்கும் பண்பீங் கில்லை
ஒழிகநின் கருத்தென உயிர்முன் புடைப்ப
அழிதரு முள்ளத் தவளொடும் போந்தவன்
கற்றத் தோர்க்கும் தொடர்புறு கிளைகட்கும்
பற்றிய கிளைஞரின் பசிப்பிணி யுறுத்துப்
பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மல்

## அருஞ்சொற்பொருள்

கொற்றம் - வெற்றி
தமர் - உறவினர்
யாமம் - சாமம்
விழுமம் - துன்பம்
யாக்கை - உடல்
நகுலம் - கீரி
கானம் - காடு
உறுபொருள் - மிகுந்த பொருள்
கரி - சான்று
தவ்வை - தாய்
நரகன் - கீழோன்
பரகதி - மேலான நிலை

## ஆ. மணிமேகலை

*– சீத்தலைச் சாத்தனார்*

தமிழில் தோன்றிய இரண்டாவது பெருங்காப்பியம் மணிமேகலை. இது ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஒரு தொடர்புள்ள வரலாற்றைக் கூறுவதாலும், சில தொடர்களும் கருத்துக்களும் இரண்டிலும் ஒத்துள்ளமையாலும் சிலப்பதிகார உரைபெறு கட்டுரையில் ‘மணிமேகலை மேல் உரை பொருள் முற்றிய சிலப்பதிகாரம் முற்றும்’ என்று கூறப்பட்டுள்ளதாலும் இவ்விரண்டையும் ‘இரட்டைக் காப்பியங்கள்’ என்றும் வழங்குவர்.

மணிமேகலையின் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. இது ஒரு பௌத்த சமயக் காப்பியம். இக்காப்பியம் விழாவறை காதை முதல் பவத்திறம் அறுக எனப் பாவை நோற்ற காதை வரை 30 காதைகளைப் பெற்று விளங்குகின்றது. இந்நூல் பல கிளைக் கதைகளையுடையதாய் அழகிய வருணனைகளைப் பெற்று நடை எளிமை காட்டி மக்களின் மனத்தை ஈர்க்கின்றது. டாக்டர் வ.சு.ப. மாணிக்கம் அவர்கள் “இந்நூல் பரத்தையொழிப்போடு, மது ஒழிப்பு, சிறை ஒழிப்பு, சாதி ஒழிப்பு என்றினைய சமுதாயச் சீர்திருத்தங்களின் களஞ்சியம்” என்று குறிப்பிடுவார்.

மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் இதன் ஆசிரியராவார். இத்தொடரே ஆசிரியருடைய ஊர், தொழில் ஆகியவற்றை விளக்குகின்றது. தண்டமிழ்ச் சாத்தன் (பதிகம் 10) தண்டமிழாசான் சாத்தான் (காட்சி 66) நன்னூற் புலவன் (காட்சி 106) என்ற தொடர்களால் சிலப்பதிகாரம் இவரைப் பாராட்டுகின்றது. உலக அறவி புக்ககாதை ஈண்டுப் பாடமாக அமைந்துள்ளது.

# மணிமேகலை

## உலக அறவி புக்க காதை

(நிலை மண்டில ஆசிரியப்பா)

### 1. காயசண்டிகையின் வியப்பு

பத்தினிப் பெண்டிர் பாத்தூண் ஏற்ற
பிச்சைப் பாத்திரப் பெருஞ்சோற் றமலை
அறத்தின் ஈட்டிய ஒண்பொருள் அறவோன்
திறத்து வழிப்படூஉம் செய்கை போல,
வாங்குகை வருந்த மன்னுயிர்க் களித்துத்
தான்தொலை வில்லாத் தகைமை நோக்கி

### 2. அவள் வேண்டல்

யானைத் தீநோய் அகவயிற் றடக்கிய
காயசண்டி கையெனும் காரிகை வணங்கி
நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி
அடலரும் முந்நீர் அடைத்த ஞான்று
குரங்குகொணர்ந் தெறிந்த நெடுமலை யெல்லாம்
அணங்குடை யளக்கர் வயிறு புக்காங்கு
இட்ட தாற்றாக் கட்டழற் கடும்பசிப்
பட்டேன், என்றன் பழவினைப் பயத்தால்;
அன்னை, கேள்நீ ஆருயிர் மருத்துவி;
துன்னிய என்னோய் துடைப்பாய்! என்றலும்

### 3. பசி தீர்த்தாள்

எடுத்த பாத்திரத் தேந்திய வமுதம்
பிடித்தவள் கையிற் பேணினன் பெய்தலும்
வயிறுகாய் பெரும்பசி நீங்கி, மற்றவள்
துயரம் நீங்கித் தொழுதனள் உரைக்கும்

### 4. பொதியில் காண வந்தேன்

மாசில் வாலொளி வடதிசைச் சேடிக்
காசில்காஞ் சனபுரக் கடிநகர் உள்ளேன்;
விஞ்சையன் தன்னொடென் வெவ்வினை உருப்பத்
தென்திசைப் பொதியில் காணிய வந்தேன்

### 5. நாவற் பெருங்கனி

கடுவரல் அருவிக் கடும்புனல் கொழித்த
இடுமணற் கானியாற் றியைந்தொருங் கிருந்தேன்
புரிநூன் மார்பின்; திரிபுரி வார்சடை
மரவுரி யுடையன் விருச்சிகன் என்போன்
பெருங்குலைப் பெண்ணைக் கருங்கனி யனையதோர்
இருங்கனி நாவற் பழமொன் றேந்தித்
தேக்கிலை வைத்துச் சேணாறு பரப்பிற்
பூக்கமழ் பொய்கை யாடச் சென்றோன்
தீவினை உருத்தலின் செருக்கோடு சென்றேன்
காலால் அந்தக் கருங்கனி சிதைத்தேன்

### 6. விருச்சிகன் இட்ட சாபம்

உண்டல் வேட்கையின் வரூஉம் விருச்சிகன்
கண்டனன், என்னைக் கருங்கனிச் சிதைவுடன்
"சீர்திகழ் நாவலிற் றிப்பிய மானது
ஈரா றாண்டில் ஒருகனி தருவது
அக்கனி யுண்டோர் ஆறீ ராண்டு
மக்கள் யாக்கையின் வரும்பசி நீங்குவர்
பன்னீ ராண்டில் ஒருநாள் அல்லது

உண்ணா நோன்பினேன் உண்கனி சிதைத்தாய்
அந்தரஞ் செல்லும் மந்திரம் இழந்து
தந்தித் தீயால் தனித்துயர் உழந்து
முந்நா லாண்டின், முதிர்கனி நா னீங்கு
உண்ணு நாளுன் உறுபசி களைக! என
அந்நாள் ஆங்கவன் இட்ட சாபம்
இந்நாள் போலும் இளங்கொடி! கெடுத்தனை

## 7. விஞ்ஞையன் வருத்தம்

வாடுபசி யுழந்த மாமுனி போயபின்
பாடிமிழ் அருவிப் பயமலை யொழிந்தென்
அலவலைச் செய்திக்கு அஞ்சினன் அகன்ற
விலகொளி விஞ்சையன் விழுமமோ டெய்தி
ஆரணங் காகிய அருந்தவன் தன்னாற்
காரண மின்றியும் கடுநோய் உழந்தனை!
வானூ டெழுகென, 'மந்திரம் மறந்தேன்!
ஊனுயிர் நீங்கும் உருப்பொடு தோன்றி
வயிறுகாய் பெரும்பசி வருத்துமென் றேற்குத்
தீங்கனி கிழங்கு செழுங்காய் நல்லன
ஆங்கவன் கொணரவும் ஆற்றே னாக
நீங்கல் ஆற்றான் நெடுந்துயர் எய்தி

## 8. கணவன் உரைத்தது

ஆங்கவன் ஆங்கெனக் கருளொடும் உரைப்போன்
"சம்புத் தீவினுள் தமிழக மருங்கில்
கம்பம் இல்லாக் கழிபெருஞ் செல்வர்
ஆற்றா மாக்கட்கு ஆற்றுந்துணை யாகி
நோற்றோர் உறைவதோர் நோனகர் உண்டால்

பலநாள் ஆயினும் நிலனொடு போகி
அப்பதிப் புகுக" என் றவனருள் செய்ய
இப்பதிப் புகுந்தீங்கு யானுறை கின்றேன்

## 9. இந்திர விழாவிற் காண்பான்

இந்திர கோடணை விழாவணி வருநாள்
வந்து தோன்றியிம் மாநகர் மருங்கே
என்னுறு பெரும்பசி கண்டனன் இரங்கிப்
பின்வரும் ஆண்டவன் எண்ணினன் கழியும்

## 10. விடைபெறலும் வேண்டுதலும்

தணிவில் வெம்பசி தவிர்த்தனை; வணங்கினேன்.
மணிமே கலையென் வான்பதிப் படர்கேன்
துக்கந் துடைக்குந் துகளறு மாதவர்
சக்கர வாளக் கோட்டமுண்டு; ஆங்கதிற்
பலர்புகத் திறந்த பகுவாய் வாயில்
உலக வறவி யொன்றுண்டு; அதனிடை
ஊரூர் ஆங்கண் உறுபசி யுழந்தோர்;
ஆரும் இன்மையி அரும்பிணி யுற்றோர்
இடுவோர்த் தேர்ந்தாங் கிருப்போர் பலரால்
வடுவாழ் கூந்தல்! அதன்பாற் போ' கென்று
ஆங்கவன் போகிய பின்னர்

## 11. உலக அறவியினை அடைதல்

– ஆயிழை

ஓங்கிய வீதியின் ஒருபுடை ஒதுங்கி
வலமுறை மும்முறை வந்தனை செய்தவ்
வுலக வறவியின் ஒருதனி ஏறிப்

பதியோர் தம்மொடு பலர்தொழு தேத்தும்
முதியோள் கோட்டமும் மும்மையின் வணங்கிக்
கந்துடை நெடுநிலைக் காரணங் காட்டிய
தந்துணைப் பாவையைத் தான்தொழு தேத்தி
வெயில்சுட வெம்பிய வேய்கரி கானத்துக்
கருவி மாமழை தோன்றிய தென்னப
பசிதின வருந்திய பைதன் மாக்கட்கு
அமுத சுரபியோ டாயிழை தோன்றி

## 12. அழைப்பும் அரவமும்

‘ஆபுத் திரன்கை அமுத சுரபியிஃது
யாவரும் வருக, ஏற்போர் தாம்! என
ஊணொலி யரவத் தொலியெழுந் தன்றே
யாணர்ப் பேரூர் அம்பல மருங்கென்

## அருஞ்சொற்பொருள்

அளக்கர் – நீளவழி

கடிநகர் – காவல் நகர்

விஞ்சையன் – வித்யாதரன்

கோட்டம் – கோயில்

# இ. சீவக சிந்தாமணி

*– விமலையார் இலம்பகம்*

ஐம்பெருங்காப்பியங்களுள் மூன்றாவதாக வைத்துப் போற்றப்படும் சீவகசிந்தாமணி 13 இலம்பகங்களையும் 3147 விருத்தப் பாடல்களையும் கொண்டது. இந்நூலை இயற்றியவர் திருத்தக்கதேவர். கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்நூல் சமண சமயத்தைச் சார்ந்தது.

புலவர்கள் சிலர் “சமண சமயத்தவர் துறவினைப் பாடுவார்களேயன்றி காமச்சுவையைப் பாடும் திறன் அற்றவர்” எனக் கூற திருத்தக்கத்தேவர் “காமச்சுவையை அவர்கள் வெறுக்கின்றவர்களேயன்றிப் பாடத் தெரியாதவர்களல்லர்” என்றார். உடனே புலவர்கள் “அப்படியாயின் காமச்சுவை முழுதுமுடைய ஒரு நூலைத் தாங்கள் இயற்றிக் காட்டுங்கள்” என்றனர்.

தேவர் தம் ஆசிரியரை அணுகி இந்நிகழ்ச்சியைக் கூறினார். ஆசிரியர் அதைப் பற்றி எண்ணிக்கொண்டிருக்கும்போது அவ்விருவரின் எதிரில் ஒரு நரி ஓடியது. அதைக் கண்ட ஆசிரியர் தம் மாணவரைப் பார்த்து “இந்நரியைக் குறித்து ஒரு சிறிய நூலியற்றி நும் துறவின் உறுதியைப் புலப்படுத்துக” என்றார். தேவரும் அவ்வண்ணமே நூலொன்றியற்றி, நிலைத்து நிற்கும் நிலையாமையைத் தெளிவாக விளக்கிக் காட்டினார். அதைக் கண்ட ஆசிரியர் பெரிதும் மகிழ்ந்து “இனி நீர் காமச்சுவை நிறைந்த சீவகன் கதையைப் பாடுவீராக” எனப் பணித்தனர். இதுவே சீவக சிந்தாமணி தோன்றிய கதையாகும்.

நமக்குப் பாடப்பகுதியாக வந்துள்ள விமலையார் இலம்பகம் சீவகன் இராசமாபுரத்து நகர வீதிகளில் சென்று அங்கு பந்து விளையாடிக் கொண்டிருந்த விமலையைக் கண்டு காதல் கொண்டு திருமணம் செய்தமை பற்றிக் கூறுகிறது.

# விமலையார் இலம்பகம்

## சீவகன் தம்பி நந்தட்டன் பதுமுகனை நோக்கிக் கூறுதல்

1. முருகுகொப் பளிக்கும் கண்ணிமுறிமிடை படலை பாலைக்
குருதிகொப் புளிக்கும் வேலான் கூந்தல்மா இவர்ந்து செல்ல
உருவவெஞ் சிலையினாற்குத் தம்பியிஃதுரைக்கும் ஒண்பொற்
பருகுபைங் கழலினாருள் பதுமுகன் கேட்கவென்றே

2. விழுமணியாக மூழ்கிக்கிடந்ததிவ் வுலகம் விற்பக்
கழுவினீர் பொதிந்து சிக்கக் கதிரொளி மறையக் காப்பின்
தழுவினீர் உலகம் எல்லாம் தாமரை உறையும் செய்யாள்
வழுவினார் தம்மைப் புல்லாள் வாழ்கநுங் கண்ணி மாதோ

3. தொழுததம் கையி னுள்ளும் துறுமுடி அகத்தும்சோர
அமுதகண் ணீரினுள்ளும் அணிகலந்து அகத்து மாய்ந்து
பழுதுகண் ணரிந்து கொல்லும் படையுடன் ஒடுங்கும் பற்றா
தொழிக யார் கண்ணுந் தேற்றந் தெளிகுற்றார் விளிகுற்றாரே.

4. வண்ணப் பூ மாலை சாந்தம் வால் அணி கலன்கள் ஆடை
கண்முகத்து உறுத்தித் தூய்மை கண்டலால் கொள்ள வேண்டா
அண்ணலம் புள்ளோடு எல்லா ஆயிரம் பேடைச் சேவல்
உண்ணுநீர் அமிழ்தம் காக்க யூகமோடு ஆய்க என்றான்.

5. அஞ்சனக் கோலின் ஆற்றா நாகமோர் அருவிக் குன்றில்
குஞ்சரம் புலம்பி வீழக் கூர்நுதி எயிற்றில் கொல்லும்
பஞ்சியின் மெல்லி தேனும் பகைசிறி தென்ன வேண்டா;
அஞ்சித் தற்காத்தல் வேண்டும் அரும்பொருளாக என்றான்.

6. “பொருந்தலால் பல்லி போன்றும் போற்றலால் தாயர் ஒத்தும்
அருந்தவர் போன்று காத்தும் அடங்கலால் ஆமை போன்றும்
திருந்தவேல் தெவ்வர் போலத் தீதற எறிந்தும் இன்ப
மருந்தினான் மனைவி யொத்தும் மதலையை காமின்” என்றான்.

## சீவகன் தன் தாயைக் கண்டு வணங்குதல்

7. பொறிமயில் இழியும் பொற்றார் முருகனில் பொலிந்து மாவின்
நெறிமையின் இழிந்து மைந்தன் மணிக்கை மத்திகையை நீக்கி
வெறுமையி னவரைப் போக்கி வெள்ளிடைப் படாத நீரால்
அறிமயில் அகவும் கோயில் அடிகளைச் செவ்வி என்றான்.

8. எல்லிருள் கனவில் கண்டேன் கண்ணிடன் ஆடும் இன்னே
பல்லியும் பட்ட பாங்கர் வருங்கொலோ நம்பி என்று
சொல்லினள் தேவி நிற்பப் பதுமுகன் தொழுது சேர்ந்து
நல்லடி பணிந்து நம்பி வந்தனன் அடிகள் என்றான்.

9. எங்கணான் ஐயன் என்றாட்கு அடியன்யான் அடிகள் என்னாப்
பொங்கிவில் உமிழ்ந்து மின்னும் புனைமணிக் கடகம் ஆர்ந்த
தங்கொளித் தடக்கை கூப்பித் தொழுதடி தழுவி வீழ்ந்தான்
அங்கிரண்டு அற்பு முன்னீர் அலைகடல் கலந்தது ஒத்தார்.

10. “வாட்டிறல் குருசில் தன்னை வாளமர் அகத்துள் நீத்துக்
காட்டகத்து உம்மை நீத்த கயத்தியேற் காண வந்தீர்;
சேட்டிளம் பருதி மார்பில் சீவக சாமி யீரே
ஊட்டரக் குண்ட செந்தா மரையடி நோவ” என்றாள்.

## சீவகன் ஆறுதல் கூறல்

11. கெடலருங் குரைய கொற்றம் கெடப்பிறந் ததுவும் அன்றி
நடலையுள் அடிகள் வைக நட்புடை யவர்கள் நைய
இடைமகன் கொன்ற இன்னா மரத்தினேன் தந்த துன்பக்
கடலகத்து அழுந்த வேண்டா களைகஇக்கவலை என்றான்.

## விசையை மைந்தர்களுக்கும் தோழர்களுக்கும் அறிவுரை கூறுதல்

12. மரவ நாகம் மணங்கமழ் சண்பகம்
குரவம் கோங்கம் குடம்புரை காய்வழை
விரவு பூம்பொழில் வேறிருந் தாய்பொருள்
உருவ மாதர் உரைக்கு மிது என்பவே.

13. நலிவில் குன்றொடு காடுறை நன்பொருள்
புலிய னார்மகள் கோடலும் பூமிமேல்
வலியினன் மிக்கவர் தம்மகள் கோடலும்
நிலை கொள் மன்னர் வழக்கென நேர்பவே.

14. நீதி யால் அறுத்து அந்நிதி ஈட்டுதல்
ஆதி யாய அரும்பகை நாட்டுதல்
மோதி முள்ளொடும் உட்பகை கண்டிடல்
பேது செய்து பிளந்திடல் பெட்டதே.

15. ஒற்றர் தங்களை ஒற்றரின் ஆய்தலும்
கற்ற மாந்தரைக் கண்ணெனக் கோடலும்
சுற்றம் சூழ்ந்து பெருக்கலும் சூதரோ
கொற்றம் கொள்குறிக் கொற்றவற்கு என்பவே.

16. வென்றி ஆக்கலும் மேதக வாக்கலும்
அன்றி யும்கல்வி யோடு அழகு ஆக்கலும்
குன்றி னார்களைக் குன்றென ஆக்கலும்
பொன் துஞ்சு ஆகத்தினாய் பொருள் செய்யுமே.

17. பொன்னி னாகும் பொருபடை அப்படை
தன்னி னாகும் தரணி தரணியில்
பின்னையாகும் பெரும்பொருள் அப்பொருள்
துன்னுங் காலைத் துன்னாதன இல்லையே.

18. நிலத்தின் நீங்கி நிதியினும் தேய்ந்து நம்
குலத்தில் குன்றிய கொள்கையம் அல்லதூம்
கலைக்க ணாளரும் இங்கில்லை காளை நீ
வலித்த தென்என வள்ளலும் கூறுவான்.

### சீவகன் விசயைக்கு ஆறுதல் கூறுதல்

19. எரியொடு நிகர்க்கும் ஆற்றல் இடிக்குரல் சிங்கம் ஆங்கோர்
நரியொடு பொருவ தென்றால் சூழ்ச்சிநற் றுணையோடு என்னாம்!
பரிவொடு கவல வேண்டா பாம்பு அவன் கலுழ னாகும்
சொரிமதுச் சுரும்புண் கண்ணிச் சூழ்கழல் நந்தன் என்றான்.

### விசயை மேலும் அறிவுரை கூறுதல்

20. கெலுழனோ நந்தன் என்னாக் கிளரொளி வனப்பினானைக்
கலுழத் தன் கையால் தீண்டிக் காதலிற் களித்து நோக்கி
வலிகெழு வயிரத் தூண்போல் திரண்டு நீண் டமைந்த திண்தோள்
கலிகெழு நிலத்தைக் காவா தொழியுமோ காளைக்கு என்றாள்.

21. இடத்தொடு பொழுது நாடி எவ்வினைக் கண்ணும் அஞ்சார்
மடப்படல் இன்றிச் சூழும் மதிவல்லார்க்கு அரிய துண்டோ
கடத்திடைக் காக்கை ஒன்றே ஆயிரங்கோடி கூகை
இடத்திடை அழுங்கச் சென்றாங்கு இன்னுயிர் செகுத்தவன்றே.

22. இழைபொறை யாற்ற கில்லாது இட்டிடை தளர நின்ற
குழைநிற முகத்தினார் போல் குறித்ததே துணிந்து செய்யார்
முழையுறை சிங்கம் பொங்கி முழங்கிமேல் பாய்ந்து மைதோய்
வழையுறை வனத்து வன்கண் நரிவலைப் பட்ட தன்றே.

### சீவகன் இராசமாபுரத்துள் செல்லுதல்

23. நாட்கடன் கழித்தபின் நாம வேலினான்
வாட்கடி எழில் நகர் வண்மை காணிய
தோட்பொலி மணிவளைத் தொய்யில் மாதரார்
வேட்பதோர் வடிவொடு விரைவின் எய்தினான்.

### இராசமாபுரத்தின் செல்வச் சிறப்பு

24. அலத்தகக் கொழுங்களி இழுக்கி அஞ்சொலார்
புலத்தலிற் களைந்தபூண் இடறிப் பொன்னிதழ்
நிலத்துகு மாலைகால் தொடர்ந்து நீள்நகர்
செலக்குறை படாததோர் செல்வ மிக்கதே

### சீவகனைக் கண்ட மகளிர் நிலை

25. மின்னின் நீள்கடம் பின்னெடு வேள்கொலொ!
மின்னும் ஐங்கணை வார்சிலை மைந்தனோ!
என்ன னோஅறி யோம்உரை யீர்எனாப்
பொன்னங் கொம்பனை யார்புலம் பெய்தினார்.

26. விண்ண கத்தினை யானன்ன மெய்ப்பொறி
அண்ண லைக்கழி மீன்கவர் புள்ளென
வண்ண வார்குழல் ஏழையர் வாள்நெடுங்
கண்ணெ லாம்கவர்ந் துண்டிடு கின்றவே.

### தேவமகளைப் போன்ற ஒருத்தி (விமலை) பந்தாடுதல்

27. வேல்நெடுங் கண்கள் அம்பா விற்படை சாற்றி எங்கும்
தேநெடுங் கோதை நல்லார் மைந்தனைத் தெருவில் எய்ய
மானெடு மழைக்கண் நோக்கி வானவர் மகளும் ஒப்பாள்
பால்நெடும் தீஞ்சொ லாளோர் பாவை பந்தாடு கின்றாள்.

28. அங்கை யந்த லத்த கத்த ஐந்து பந்து அமர்ந்தவை
மங்கை ஆட மாலை சூழும் வண்டு போல வந்துடன்
பொங்கி மீது எழுந்து போய்ப்பி றழ்ந்து பாய்தல் இன்றியே
செங்க யற்கண் புருவம் தம்முள் உருவம் செய்யத் திரியுமே.

29. மலை யுட்க ரந்தபந்து வந்து கைத்த லத்த வாம்
ஏல நாறி ருங்கு ழல்பு றத்த வான்மு கத்தவாம்
நூலின் நேர்நு சுப்பு நோவ உச்சிமாலை யுள்ளவாம்
மேலெ முந்த மீநி லத்த விரல கைய ஆகுமே.

30. கொண்டு நீங்கல் கோதை வேய்தல் குங்குமம் அணிந்துராய்
எண்தி சையும் ஏணி ஏற்றிஇலங்க நிற்றல் பத்தியின்
மண்டிலம்வ ரப்பு டைத்தன் மயிலிற் பொங்கி இன்னணம்
வண்டும் தேனும் பாட மாதர் பந்து மைந்துற் றாடுமே.

### விமலை ஆடிய பந்து ஒன்று சீவகன் முன்னே வீழ்தல்

31. நன்மணி சிலம்பி னோடு கிண்கிணிந் நகந்நகும்
மின்ம லர்ந்த முல்லை மாலை நக்கி மிக்கு இறந்தெழுந்து
பொன் மலர்ந்த கோதை பந்து பொங்கி யொன்று போந்து பாய்ந்து
மின்ம லர்ந்த வேலினான் முன் வீதி புக்கு வீழ்ந்ததே.

## விழுந்த பந்தினை விமலை பார்க்கின்ற காலத்து சீவகனையும் நோக்குதல்

32. வீழ்ந்த பந்தின் மேல் விரைந்து மின்னின் நுண்நு சுப்பினாள்
சூழ்ந்த காசு தோன்ற அம்து கில்நெ கிழ்ந்து பூங்குழல்
தாழ்ந்து கோதை பொங்கி வீழ்ந்து வெம்முலைகள் தைவரப்
போழ்ந்த கன்ற கண்ணி வந்து பூங்கொடியின் நோக்கினாள்.

## சீவகனைக் கண்ட விமலையின் நிலையைக் கூறுதல்

33. மந்தார மாலை மலர் வேய்ந்து மகிழ்ந்து தீந்தேன்
கந்தாரம் செய்து களிவண்டு முரன்று பாடப்
பந்தார்வம் செய்து குவளைக் கண் பரப்பி நின்றாள்
செந்தா மரை மேல் திருவின் உரு எய்தி நின்றாள்.

34. நீர் தங்கு திங்கள் மணிநீள் நிலம் தன்னுள் ஓங்கிச்
சீர் தங்கு கங்கைத் திருநீர்த்தண் துவலை மாந்திக்
கார் தங்கி நின்ற கொடி காளையைக் காண்ட லோடு
பீர் தங்கி பெய்யா மலரில் பிறி தாயி னாளே.

35. பெண்பா லவர்கட்கு அணியாய்ப் பிரியாத நாணும்
திண்பால் நிறையும் திருமாலையுஞ் சேர்ந்த சாயல்
கண்பாற் கவினும் வளையும் கவர்ந்திட்ட கள்வன்
மண்பால் இழிந்த மலர் ஐங்கணை மைந்தன் என்றாள்.

36. என்றாள் நினைந்தாள் இதுபோலும் இவ்வேட்கை வண்ணம்
சென்றே படினும் சிறந்தார்க்கும் உரைக்க லாவது அன்றாய்
அரிதாய் அகத்தே சுட்டு உருக்கும் வெந்தீ ஒன்றே
உலகத்து உறுநோய் மருந்து இல்ல தென்றாள்.

## இருவரும் ஒருவரையொருவர் நோக்குதல்

37. நெஞ்சங் கலங்கி நிறை யாற்றுப் படுத்து நின்றாள்
அஞ்செங் கழுநீர் அலர்ந்த ம்மதி வாள்மு கத்தே
வஞ்சம் வழங்கா தவன் கண்களின் நோக்கம் மாதோ
தஞ்சம் வழங்கித் தலைக் கொண்டது காம வெந்தீ.

## விமலையை எண்ணிக் கொண்டே சாகரதத்தன் கடை முன் நிற்க அவனுடைய கடையில் என்றும் இல்லாதபடி சரக்குகள் விற்றுத் தீர்தல்

38. என்றாங் கொல் மாதர் நலம் எய்துவ தென்று சிந்தித்து
ஒன்றார் கடந்தான் புலம்புட் கொண்டிருத்த லோடும்
அன்றே அமைந்த பசும்பொன் அடர்ஆறு கோடி
குன்றாமல் விற்றான் குளிர்சாகர தத்தன் என்பான்.

## சாகரதத்தன் சீவகனைத் தம் இல்லத்திற்கு அழைத்துச் செல்லல்

39. திருமல்க வந்த திருவே எனச் சேர்ந்து நாய்கன்
செருமல்கு வேலாய்க்கு இடமாலிது என்று சேப்ப
வரி மல்கி வண்டுண்டு அறைமாமலர்க் கண்ணி மைந்தன்
எரிமல்கு செம்பொன் நிலம்மாமனொடு ஏறி னானே.

## சாகரதத்தன் சீவகனிடம் கூறியன

40. நம்பன் சிறிதே இடைதந்து இது கேட்க நாளும்
அம்பொன் நகருள் அமைந்தேன்; மற்று எனக்கு அமைந்தாள்
கம்பம் இலாதாள் கமலைக்கு விமலை என்பாள்
செம்பொன் வியக்கு நிறத்தாள் திரு அன்ன நீராள்.

41. பூம்பாவை வந்து பிறந்தாள் அப் பிறந்த போழ்தே
ஆம்பால வெல்லாம் அறிவார் அன்று எழுதி யிட்டார்
தூம்பியாதும் இல்லாக் குளம் போன்றதென் தோமில் பண்டம்
கூம்பாத செல்வக் கொடியே யிது கேண்மோ என்றான்.

42. மங்கைக் குரியான் கடையேறும் வந்து ஏற லோடும்
வங்க நிதிய முடன் வீழும்மற் றன்றி வீழாது
எங்கும் தனக்கு நிகரில்லவன் ஏற்ற மார்பம்
நங்கைக்கு இயன்ற நறும்பூவணைப் பற்றி யென்றான்.

### சாகரதத்தன் கூற்றால் சீவகனும் விமலையும் வருத்தம் நீங்குதல்

43. ஏற்ற கைத் தொடி வீழ்ந்தென ஏந்தலைத்
தேற்றி னான்திரு மாநலம் செவ்வனே
தோற்ற மாதரும் தோன்றலைக் காண்டலும்
ஆற்றி னாள்தன தாவியும் தாங்கினாள்.

### சீவகன்-விமலை திருமணம் நடைபெறல்

44. அம்பொற் கொம்பனை யானையும் வார்கழல்
செம்பொற் குன்றனை யானையும் சீர்பெறப்
பைம்பொன் நீள்நகர்ப் பல்லியம் ஆர்த்தெழு
இம்பர் இல்லதோர் இன்பம் இயற்றினார்.

## அருஞ்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| முருகு | - | மணம் |
| முறி | - | தளிர் |
| வால் | - | தூய்மை |
| யூகம் | - | கருங்குரங்கு |
| குஞ்சரம் | - | யானை |
| தெவ்வர் | - | பகைவர் |
| மத்திகை | - | குதிரைச் சவுக்கு |
| செவ்வி | - | சமயம் |
| எல்லிருள் | - | விடியற்காலம் |
| கயத்தி | - | கொடியவள் |
| நடலை | - | துன்பம் |
| மரவம் | - | குங்குமமரம் |
| கோடல் | - | மணந்து கொள்ளுதல் |
| கொற்றம் | - | வெற்றி |
| துஞ்சுதல் | - | தங்குதல் |
| கலைக்கணாளர் | - | அமைச்சர் |
| கலுழன் | - | கருடன் |
| சுரும்பு | - | வண்டு |
| இழை | - | அணிகலன் |

| | | |
|---|---|---|
| பொறை | - | பாரம் |
| முழை | - | குகை |
| வழை | - | சுரபுன்னை மரம் |
| நாட்கடன் | - | காலைக்கடன் |
| நாமம் | - | அச்சம் |
| அலத்தகம் | - | செம்பஞ்சுக் குழம்பு |
| சிலை | - | கரும்பு வில் |
| புலம்பு | - | வருத்தம் |
| கழி | - | உப்பங்கழி |
| புள் | - | மீன் கொத்திப் பறவை |
| ஏழையர் | - | மகளிர் |
| உருவம் | - | அழகு |
| நுசுப்பு | - | இடை |
| ஏணி | - | எல்லை |
| மண்டிலம் | - | வட்டம் |
| புடைத்தல் | - | அடித்தல் |
| போழ்ந்து | - | பிளந்து |
| துவலை | - | துளி |
| மாந்தி | - | உண்டு |
| பெய்யாமலர் | - | பழம்பூ |
| திருமாமை | - | அழகிய நிறம் |
| கவின் | - | அழகு |
| மலர் ஐங்கணை மைந்தன் | - | மன்மதன் |
| ஒன்றார் | - | பொருந்தாதவர் |
| வங்கம் | - | கடல் |
| நறும்பூ வணைப்பள்ளி | - | மணமுடைய மலர்களாகிய படுக்கை |
| தொடி | - | வளையல் |
| பல்லியம் | - | பலவித வாத்தியங்கள் |
| இம்பர் | - | இவ்வுலகம் |

# ஈ. பெருங்கதை

*- கொங்குவேளிர்*

வத்ச தேசத்து அரசனாகிய உதயணனின் வரலாற்றை உரைக்கும் இந்நூல் அகவற்பாக்களாலாகியது. உஞ்சைக் காண்டம், இலாவண காண்டம், மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாண காண்டம், துறவுக் காண்டம் என்னும் ஆறு காண்டங்களையுடையது. இதன் ஆசிரியர் விசய மங்கலத்தைச் சேர்ந்த வேளாண்மரபில் வந்த சிற்றரசனான கொங்குவேள் என்பவராவார். இதனால் இது கொங்குவேளிர் மாக்கதை என்றும் வழங்கப்படுகின்றது. குணாட்டியர் என்பவரால் பைசாச மொழியில் எழுதப்பட்ட 'பிருகத்கதா' என்னும் நூலினைத் தழுவி அதில் இடம்பெற்றுள்ள 'நரவாண தத்தன்' என்பவனது வரலாற்றை அடியொற்றி எழுதப்பட்டுள்ளது.

சமண சமயக் கொள்கைகளோடு நீத்தார் பெருமை, நண்பர்களின் கடமை, ஊழின் வலிமை, அரசாட்சி முறைமை ஆகிய கருத்துக்கள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. இந்நூலின் சிறப்பில் மனம் ஈடுபட்ட டாக்டர் தெ.பொ.மீ அவர்கள் 'அந்நாளைய நாகரிக வாழ்வின் சிறப்புகளும் வகைகளும் இந்நூலில் விளங்கித் தோன்றுவதைப் போல் வேறு எந்தத் தமிழ் நூலிலும் விளங்குவதில்லை' என்று பாராட்டிக் கூறியுள்ளார். பதுமாபதியை வஞ்சித்தது ஈண்டுப் பாடமாக அமைந்துள்ளது.

## பெருங்கதை

### பதுமாபதியை வஞ்சித்தது

(உதயணன் உருமண்ணுவாவை வினாவல்)

பிரிந்துபின் வந்த பெருந்திற லமைச்சனொ
டருந்திறல் வேந்த னமைவரக் கூடி
இருந்த பின்றை நிகழ்ந்தது கூறெனச்

(உருமண்ணுவா நிகழ்ந்தவற்றை உதயணனுக்குக் கூறல்)

செருச்செய் மன்னன் சிறையிடைச் செய்தலும்
தருசகன் றன்வயின் விடுத்த தன்மையும்
பொருவகை புரிந்தவர் புணர்ந்த நீதியும்
தெரிய வெல்லாம் விரியக் கூறி

(உருமண்ணுவா வயந்தகனிடம் கூறல்)

அந்நிலை கழிந்த பின்னிலைப் பொழுதின்
இன்புறு செவ்வியு னின்னது கூறென
வன்புறை யாகிய வயந்தகற் குணர்த்த

(உதயணன் செயல்)

உருமண் ணுவாவினொ டொருங்குகண் கூடித்
தருமணன் ஞெமரிய தண்பூம் பந்தருட்
டிருமலி மார்பன் றேவி பயிற்றிய
வீணை பெற்றது விரித்தவற் குரைத்துத்
தேனேர் கிளவியைத் தேவி யரற்ற

(வயந்தகன் உதயணனைக் கேட்டல்)

மானங் குன்றா வயந்தகன் கூறும்
நயந்துநீ யரற்று நன்னுத லரிவையும்
பயந்த கற்பிற் பதுமா பதியுமென்
றிருவ ருள்ளுந் தெரியுங் காலை
யாவர் நல்லவ ரறிவினு மொழுக்கினும்
யாவரை யுவத்தி யாவதை யுணரக்
காவ லாள கரவா துரையென

(உதயணன் விடை கூறுதல்)

முறுவல் கொண்டவ னறியு மாயினும்
பல்பூட் சில்சொற் பட்டத் தேவியைச்
சொல்லாட் டிடையுஞ் செல்ல றீர்தலிற்
பீடுடை யொழுக்கிற் பிரச்சோ தனன்மகள்
வாடிடை மழைக்கண் வாசவ தத்தை

கண்ணகன் ஞாலத்துப் பெண்ணருங் கலமவள்
செறுந ருவப்பச் செந்தீ யகவயின்
உறுதவ மில்லேற் கொளித்தன டானென
மறுகுஞ் சிந்தை மன்னனை நோக்கி

(வயந்தகன் கூற்று)

வெங்கண் வேந்தர் தங்கட் குற்ற
தங்கண் ஞாலத் தாரே யாயினும்
அகலிடத் துரைப்பி னற்றம் பயத்தலின்
அவரின் வாழ்வோ ரவர்முன் னின்றவர்
இயல்பி னீர்மை யிற்றென வுரைப்பின்
விம்ம முறுதல் வினாவது முடைத்தோ
அற்றே யாயினு மிற்றுங் கூறுவென்
நயக்குங் காத னல்வளைத் தோளியைப்
பெயர்கும் விச்சையிற் பெரியோற் கண்டவன்
உவக்கு முபாய மொருங்குடன் விடாது
வழிபா டாற்றி வல்லிதிற் பெறீஇய
கழிபெருங் காதலொடு சென்றபி னவ்வழிக்
காசி யரசன் பாவையைக் கண்டே
வாசவ தத்தையை மறந்தனை யாகிப்
பரவை யல்குற் பதுமா பதியோ
டிரவும் பகலு மறியா வின்புற்
றுட்குவரு கோயிலு ளொடுங்குவனை யுறைந்தது
மற்போர் மார்ப மாண்புமற் றுடைத்தோ
அன்னது மாக வதுவே யாயினும்
திண்ணிதி னதனையுந் திறப்படப் பற்றாய்
பின்னிது நினைக்கும் பெற்றியை யாதலின்
ஒருபாற் பட்டதன்றுநின் மனனெனத்

(உதயணன் கூற்று)

திருவார் மார்பன் றெரிந்தவற் குரைக்கும்
வடுவாழ் கூந்தல் வாசவ தத்தையொ
டிடைதெரி வின்மையி னவளே யிவளென
நயந்தது நெஞ்ச நயவா தாயினும்
பால்வகை வினையிற் படர்ந்த வேட்கையை
மால்கடல் வரைப்பின் மறுத்தன ரொழுகுதல்
யாவர்க் காயினு மாகா ததுவென
மேவரக் காட்டலு மீட்டுங் கூறுவன்

(வயந்தகன் கூற்று)

அறியா னிவனென னெறியிற் கேண்மதி
அன்றுநாங் கண்ட வரும்பெற லந்தணன்
இன்றுநாங் காண விந்நகர் வந்தனன்
மானோர் நோக்கி மாறிப் பிறந்துழித்
தானே யாகத் தருகுவெ னென்றனன்
பனிமலர்க் கோதைப் பதுமையை நீங்கித்
தனியை யாகித் தங்குதல் பொருளெனக்

(உதயணன் பதுமாபதி முதலியோரை வஞ்சித்து

அகற்றிச் சென்று துயிலல்)

கேட்டே யுவந்து வேட்டவன் விரும்பி
மாற்று மன்னரை மருங்கறக் கெடுப்பதோர்
ஆற்றற் சூழ்ச்சி யருமறை யுண்டெனத்
தேவி முதலா யாவிரு மகன்மினென்
றாய்மணி மாடத் தவ்விடத் தகன்று
திருமணக் கிழமைப் பெருமக ளுறையும்

பள்ளிப் பேரறை யுள்விளக் குறீஇ
மயிரினுந் தோலினு நூலினு மியன்ற
பயில்பூஞ் சேக்கையுட் பலரறி வின்றி
உழைக்கலச் சுற்றமு மொழிந்தன னாகி
விழுத்தகு வெண்டுகில் விரித்தன னுடுத்துத்
தூய னாகி வாய்மொழி பயிற்றித்
தோட்டுணை மாதரை மீட்டனை பணியென
வாட்படை மறவன் காட்டிய வகைமேற்
சேட்புலம் பகலச் சிந்தை நீக்கி
வீணை கைவலத் திரீஇ விதியுளி
ஆணை வேந்த னமர்ந்தனன் றுயிலென்.

## அருஞ்சொற்பொருள்

| | |
|---|---|
| உருமண்ணுவா | - அமைச்சன் |
| வன்புறை | - வற்புறுத்துபவன் |
| கிளவியை | - வாசவதத்தையை |
| வாடிடை | - வாடிய இடை |
| உவத்தி | - உவப்பாய் |
| கரவாது | - மறையாமல் |
| அற்றம் | - சோர்வு |
| உட்கு | - அச்சம் |
| திண்ணிதின் | - உறுதியாக |
| மருங்கு | - குலம் |
| மறை | - இரகசியம் |
| உழைக்கலச்சுற்றம் | - உழைக்கல மகளிர் |
| வாட்படை மறவன் | - வயந்தகன் |
| சேட்புலம்பு | - நெடுங்காலம் பிரிந்தமையாலிருந்த வருத்தம் |
| விதியுளி | - விதிப்படி |
| வேந்தன் | - உதயணன் |

# அலகு - 2

# சைவம், வைணவம், இசுலாம், கிறித்துவம்

## அ. பெரியபுராணம்

### இளையான்குடி மாறநாயனார் புராணம்

63 நாயன்மார்களின் வரலாற்றைக் கூறுவது பெரியபுராணம். இதனை இயற்றியவர் சேக்கிழார். இந்நூலுக்கு அவர் இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம் அல்லது திருத்தொண்டர் மாக்கதை. அடியார்களின் பெருமைகளை சேக்கிழார் பாடியதால் தொண்டர் சீர் பரவுவார் என்று வழங்கப்படுகிறார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை தம் நூலில் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலன் என்று இவரைப் பாராட்டுகிறார்.

சேக்கிழாரின் இயற்பெயர் அருண்மொழித்தேவர். தொண்டை நாட்டில் புலியூர்க்கோட்டம் அருகில் உள்ள குன்றத்தூர் இவரது ஊர். கி.பி. 12ஆம் நூற்றாண்டில் சோழநாட்டை ஆட்சி செய்த அநபாயன் என்ற சிறப்புப் பெயருடைய மூன்றாம் குலோத்துங்கச் சோழன் அவையில் முதலமைச்சராக இருந்தவர். அப்போது இவருக்கு உத்தமச் சோழ பல்லவன் என்ற பட்டம் வழங்கப்பட்டது.

சீவக சிந்தாமணியில் அரசன் தன் மனதைப் பறிகொடுத்து இருப்பது கண்டு மன்னனின் மயக்கத்தை நீக்கி சைவத்தின் சிறப்பை உணரச் செய்வதற்காகப் படைக்கப்பட்டதுதான் பெரியபுராணம். இந்நூலைப் படைக்க நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியும், சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையும் உதவியாக இருந்துள்ளன.

பெரியபுராணம் இரண்டு காண்டங்களையும் 13 சருக்கங்களையும் 4286 விருத்தங்களையும் உடையது. இந்நூலில் 63 நாயன்மார்கள் பற்றியும் 9 தொகை அடியார்கள் குறித்தும் செய்திகள் உள்ளன. இந்நூல் பன்னிரு திருமுறையில் 12ஆம் திருமுறையாக இடம்பெற்றுள்ளது. இளையான்குடி மாறநாயனார் புராணம் ஈண்டு நமக்குப் பாடப்பகுதியாக அமைந்துள்ளது.

# இளையான்குடி மாறநாயனார் புராணம்

1. அம்பொன் நீடிய அம்பலத் தினில் ஆடுவார் அடி சூடுவார்
தம்பிரான் அடி மைத்திறத்து உயர் சால்பின் மேன்மைத ரித்துஉளார்
நம்பு வாய்மையில் நீடுசூத்திர நல்கு லம்செய்த வத்தினால்
இம்பர் ஞாலம் விளக்கினார் இளையான் குடிப்பதி மாறனார்

2. ஏரின்மல்கு வளத்தினால் வரும் எல்லை இல்லதுஓர் செல்வமும்
நீரின்மல்கிய வேணியார் அடி யார்திறத்து நிறைந்தது ஓர்
சீரின்மல்கிய அன்பின் மேன்மை திருந்த மன்னிய சிந்தையும்
பாரின்மல்க விரும்பி மற்றவை பெற்ற நீடுப யன் கொள்வார்

3. ஆரம் என்பு புனைந்த ஐயர்தம் அன்பர் என்பது ஓர் தன்மையால்
நேரவந்தவர் யாவர் ஆயினும் நித்தம் ஆகிய பத்திமுன்
கூரவந்து எதிர்கொண்டு கைகள் குவித்து நின்று செவிப்புலத்து
ஈரம் மென்மது ரப்பதம் பரிவு எய்த முன்உரை செய்தபின்

4. கொண்டு வந்து மனைப் புகுந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆதனித்து இடை வைத்து அருச்சனை செய்தபின்
உண்டி நாலுவிதத்தில் ஆறு சுவைத் திறத்தினில் ஒப்புஇலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில் அமுதுசெய்ய அளித்து உளார்.

5. ஆளும் நாயகர் அன்பர் ஆனவர் அளவுஇலார் உளம் மகிழவே
நாளும் நாளும் நிறைந்து வந்து நுகர்ந்த தன்மையின் நன்மையால்
நீளும் மாநிதி யின்பரப்பு நெருங்கு செல்வம் நிலாவி எண்
தோளி னார் அளகைக்கு இருத்திய தோழ னார்என வாழும்நாள்

6. செல்வம் மேவிய நாளில் இச்செயல் செய்வது அன்றியும் மெய்யினால்
அல்லல் நல்குரவு ஆனபோதினும் வல்லர் என்று அறிவிக்கவே
மல்லல் நீடிய செல்வம் மெல்ல மறைந்து நாள்தொறும் மாறிவந்து
ஒல்லைஇல் வறுமைப்பதம் புக உன்னி னார்தில்லை மன்னினார்

7. இன்ன ஆறுவளம் சுருங்கவும் எம்பிரான் இளையான் குடி
மன்னன் மாறன் மனம் சுருங்குதல் இன்றி உள்ளன மாறியும்
தன்மை மாறி இறுக்க உள்ள கடன்கள் தக்கன கொண்டுபின்
முன்னை மாறுஇல் திருப்பணிக்கண் முதிர்ந்த கொள்கையர் ஆயினார்

8. மற்றுஅவர் செயல் இன்ன தன்மையது ஆகமால் அயன் ஆன அக்
கொற்ற ஏனமும் அன்னமும் தெரியாத கொள்கையர் ஆயினார்
பெற்றம் ஊர்வதும் இன்றி நீடிய பேதையாள் உடன் இன்றிஓர்
நல்தவத்தவர் வேடமே கொடு ஞாலம் உய்ந்திட நுண்ணினார்

9. மாரிக் காலத்து இரவினில் வைகியோர்
தாரிப்பு இன்றிப் பசிதலைக் கொள்வது
பாரித்து இல்லம் அடைந்தபின் பண்புஉற
வேரித் தாரான் விருந்து எதிர் கொண்டனன்

10. ஈரமேனியை நீக்கி இடம் கொடுத்து
ஆர இன்அமுது ஊட்டுதற்கு ஆசையால்
தார மாதரை நோக்கித் தபோதனர்
தீரவே பசித்தார் செய்வது என் என்று

11. நமக்கு முன்பு இங்கு உணவுஇலை ஆயினும்
இமக்கு லக்கொடி பாகர்க்கு இனியவர்
தமக்கு நாம்இன் அடிசில் தகவுஉற
அமைக்கு மாறு எங்ஙனே அணங்கே என

12. மாது கூறுவள் மற்று ஒன்றும் காண்கிலேன்
ஏதிலாரும் இனித் தருவார் இல்லை
போதும் வைகிற்றுப் போம் இடம் வேறு இல்லை
தீது செய்வினையேற்கு என் செயல் என்று

13. செல்லல் நீங் கப்பகல் வித்திய செந்நெல்
மல்லல் நீர்முளை வாரிக்கொடு வந்தால்
வல்லவாறு அமுது ஆக்கலும் ஆகும் மற்று
அல்லது ஒன்று அறியேன் என்று அயர்வுஉற

14. மற்று அம்மாற்றம் மனைவியார் கூறமுன்
பெற்ற செல்வம் எனப் பெரிது உள்மகிழ்ந்து
உற்ற காதலினால் ஒருப்பட்டனர்
சுற்று நீர்வயல் செல்லத் தொடங்குவார்

15. பெருகவானம் பிறங்க மழைபொழிந்து
அருகு நாப்பண் அறிவு அரும் கங்குல்தான்
கருகு மைஇரு ளின்கணம் கட்டுவிட்டு
உருகு கின்றது போன்றது உலகுஎலாம்

16. எண்ணும் இவ்வுலகத்தவர் யாவரும்
துண் எனும்படி தோன்றமுன் தோன்றிடில்
வண்ணம் நீடிய மைக்குழம்பு ஆம்என்று
நண்ணல் செய்யா நடுஇருள் யாமத்து

17. உள்ளம் அன்புகொண்டு ஊக்க ஓர்பேர் இடாக்
கொள்ள முன்கவித்துக் குறியின்வழிப்
புள்உறங்கும் வயல்புகப் போயினார்
வள்ளலார்இளை யான்குடி மாறனார்

18. காலினால் தடவிச் சென்று கைகளால்
சாலிவெண் முளை நீர்வழிச் சார்ந்தன
கோலிவாரி இடாநிறையக் கொண்டு
மேல் எடுத்துச் சுமந்து ஒல்லை மீண்டார்

19. வந்த பின் மனைவி யாரும் வாய்தலின் நின்று வாங்கி
சிந்தையில் விரும்பி நீரில் சேற்றினை அலம்பி ஊற்றி
வெம்தழல் அடுப்பின்மூட்ட விறகு இல்லை என்ன மேலோர்
அந்தம்இல் மனையில் நீடும் அலக்கினை அறுத்து வீழ்த்தார்

20. முறித்து அவை அடுப்பின் மாட்டி முளைவித்துப் பதம்முன் கொள்ள
வறுத்தபின் அரிசி ஆக்கி வாக்கிய உலையில் பெய்து
வெறுப்பு இல்இன் அடிசில் ஆக்கி மேம்படு கற்பின் மிக்கார்
கறிக்கு இனி என்செய்கோம் என்று இறைஞ்சினார் கணவனாரை

21. வழிவரும் இளைப்பினோடும் வருந்திய பசியினாலே
அழிவு உறும் ஐயன் என்னும் அன்பினின் பொலிந்து சென்று
குழி நிரம்பாத புன்செய்க் குறும் பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப் பறித்து அவை கறிக்கு நல்க

22. மனைவியார் கொழுநர் தந்த மனம் மகிழ் கறிகள் ஆய்ந்து
புனல்இடைக் கழுவித்தக்க புனித பாத்திரத்துக் கைம்மை
வினையினால் வேறுவேறு கறிஅமுது ஆக்கிப் பண்டை
நினைவினால் குறையை நொந்து திருஅமுது அமைத்து நின்று

23. கணவனார் தம்மை நோக்கிக் கறிஅமுது ஆனகாட்டி
இணை இலாதாரை ஈண்டு அமுது செய்விப்போம் என்ன
உணர்வினால் உணர ஒண்ணா ஒருவரை உணர்த்த வேண்டி
அணையமுன் சென்று நின்று அங்கு அவர்துயில் அகற்றல் உற்றார்.

24. அழுந்திய இடருள் நீங்கி அடியனேன் உய்ய என்பால்
எழுந்தருள் பெரியோய் ஈண்டு அமுது செய்தருள்க என்று
தொழும்பனார் உரைத்த போதில் சோதியாய் எழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவியாரும் தொண்டரும் திகைத்து நின்றார்.

25. மால் அயற்கு அரிய நாதன் வடிவுஒரு சோதி ஆகச்
சாலவே மயங்குவார்க்குச் சங்கரன்தான் மகிழ்ந்தே
ஏலவார்குழலாள் தன்னோடு இடபவா கனன்ஆய்த் தோன்றிச்
சீலம்ஆர் பூசை செய்த திருத்தொண்டர் தம்மை நோக்கி

26. அன்பனே அன்பர் பூசை அளித்து நீ அணங்கினோடும்
என்பெரும் உலகம் எய்தி இருநிதிக் கிழவன் தானே
முன்பொரு நிதியம் ஏந்தி மொழிவழி ஏவல்கேட்ப
இன்பம் ஆர்ந்து இருக்க என்றே அருள் செய்தான் எவர்க்கும் மிக்கான்.

27. இப்பரிசு இவர்க்குத் தக்க வகையினால் இன்பம் நல்கி
முப்புரம் செற்றார் அன்பர் முன்பு எழுந்தருளிப் போனார்
அப்பெரியவர் தம் தூய அடிஇணை தலைமேல் கொண்டு
மெய்ப்பொருள் சேதி வேந்தன் செயலினை விளம்பல் உற்றேன்.

## அருஞ்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| ஏரின் மல்கு | - | ஏர்த்தொழில் மிக்க |
| மாநிதி | - | பெருஞ்செல்வம் |
| நல்குரவு | - | வறுமை |
| ஏனம் | - | பன்றி |
| தபோதனர் | - | தவத்தையே தனமாக உடையவர் |
| அடிசில் | - | உணவு |
| ஏதிலார் | - | அயலார் |
| செல்லல் | - | வறுமை |
| ஒருப்பட்டனர் | - | உடன்பட்டனர் |
| கணம் | - | கூட்டம் |
| இடா | - | கூடை |
| ஒல்லை | - | விரைவாக |
| அந்தமில்மனை | - | அழியாப் புகழ் கொண்ட மனை |
| கொழுநர் | - | கணவர் |
| கைம்மை | - | கைத்திறனால் |
| இருநிதிக்கிழவன் | - | குபேரன் |

# ஆ. கம்பராமாயணம்

## மந்தரை சூழ்ச்சிப் படலம்

கவியின்பம் நிறைந்த காவியம் கம்பராமாயணம். சொல்லழகும் பொருளழகும் கொண்டு தமிழுக்கு வளம் சேர்க்கும் இந்நூல் கி.பி. 9ஆம் நூற்றாண்டிலிருந்து 12ஆம் நூற்றாண்டிற்குள் எழுந்த நூல். இதன் ஆசிரியர் கம்பர். இவரின் கவித்திறமையை

"கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்"

"கவிச்சக்கரவர்த்தி கம்பர்"

என்று உரைக்கப்படுவதிலிருந்து அறிய முடிகிறது.

திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்த சடையப்ப வள்ளளால் கம்பர் ஆதரிக்கப்பட்டார். அதனால் தம் காவியத்தில் ஆயிரம் பாடலுக்கு ஒருமுறை சடையப்பரின் கொடையையும் பிற குணங்களையும் குறிப்பிட்டு நன்றி தெரிவித்தார். கம்பர் தம் இராமாயணத்தைப் பதினைந்தே நாளில் எழுதி முடித்தார் என்பர். இதனை

"விழுந்த ஞாயிறு எழுவதன் முன்மறை வேதியருடன் ஆராய்ந்து
எழுந்த ஞாயிறு விழுவதன் முன்கவி பாடினது எழுநூறே"

என்ற பாடல் விளக்குகின்றது. கம்பர் தம் நூலைத் திருவரங்கத்தில் அரங்கேற்றினார். அங்கே வைணவ ஆச்சாரியரான நாதமுனிகள் கம்பருக்குக் 'கவிச்சக்கரவர்த்தி' என்னும் பட்டமளித்ததாகக் கூறுவர்.

கம்பர் இக்காப்பியம் தவிர ஏரெழுபது, சடகோபர் அந்தாதி, சரசுவதி அந்தாதி ஆகியவற்றை எழுதினார். கம்பராமாயணம் 6 காண்டங்களையும் 118 படலங்களையும் 10,500 பாடல்களையும் கொண்ட மாபெரும் காப்பியம். நமக்குப் பாடமாக மந்தரை சூழ்ச்சிப் படலம் இடம்பெற்றுள்ளது.

## மந்தரை சூழ்ச்சிப் படலம்

1. ஏற்றிட ஆண்டகை இனி(து)இ ருந்துழி
நூல்த்தட மார்பனும் நொய்தின் எய்தப்போய்
ஆற்றல்சால் அரசனுக்(கு) அறிவித் தான் அவன்
'சாற்றுக நகரணி சமைக்க' என்றனன்.

2. ஏவின வள்ளுவர் இராமன் நாளையே
பூமகள் கொழுநனாய்ப் புனையும் மௌலிஇக்
கோநகர் அணி(க) எனக் கொட்டும் பேரிஅத்
தேவரும் களிகொளத் திரிந்து சாற்றினார்.

3. கவியமை கீர்த்திஅக் காளை நாளையே
புவியமை மணிமுடி புனையும் என்றசொல்
செவியமை நுகற்சிய எனினும் தேவர்தம்
அவியமு(து) அன்னஅந் நகரு ளார்க்கெலாம்

4. ஆர்த்தனர் களித்தனர் ஆடிப் பாடினர்
வேர்த்தனர் தடித்தனர் சிலிர்த்து மெய்ம்மயிர்
போர்த்தனர் மன்னனைப் புகழ்ந்து வாழ்த்தினர்
தூர்த்தனர் நீள்நிதி சொல்லி னார்க்கெலாம்

5. திணிசுடர் இரவியைத் திருத்தும் ஆறும்அப்
பணியிடைப் பள்ளியான் பரந்த மார்பிடை
மணியினை வேகடம் வகுக்கும் ஆறும்போல்
அணிநகர் அணிந்தனர் அருத்தி மாக்களே

6. வெள்ளிய கரியன செய்ய வேறுள
கொள்ளைவான் கொடிநிரைக் குழாங்கள் தோன்றுவ
கள்ளவிழ் கோதையான் செல்வம் காணிய
புள்ளெலாம் திருநகர் புகுந்த போன்றவே

7. ஆடல்மான் தேர்க்குழாம் அவனி காணிய
வீடெனும் உலகின்வீழ் விமானம் போன்றன
ஓடைமாக் கடகளி(று) உதய மால்வரை
தேடருங் கதிரொடும் திரிவ போன்றவே.

8. பூமழை பொரிமழை புதுமென் சுண்ணத்தின்
தூமழை தரளத்தின் தோமில் வெண்மழை
தாம்இழை நெரிதலில்த் தகர்ந்த பொன்மழை
மாமழை நிகர்த்தன மாட வீதியே.

9. ஏய்ந்தெழு செல்வமும் அழகும் இன்பமும்
தேய்ந்தில அனையது தெரிகி லாமையால்
ஆய்ந்தனர் பெருகவும் அமரர் இம்பரில்ப்
போந்தவர் போந்திலம் என்னும் புந்தியால்

10. அந்நகர் அணிவுறும் அமலை வானவர்
பொன்னகர் இயல்பெனப் பொலியும் எல்லையில்
இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னரும் கொடுமனக் கூனி தோன்றினாள்.

11. தோன்றிய கூனியும் துடிக்கும் நெஞ்சினாள்
ஊன்றிய வெகுளியாள் உளைக்கும் உள்ளத்தாள்
கான்(று)எரி நயனத்தாள் கதிக்கும் சொல்லினாள்
மூன்றுல கினுக்கும் ஓர் இடுக்கண் மூட்டுவாள்.

12. தொண்டைவாய்க் கேகயன் தோகை கோயில்மேல்
மண்டினாள் வெகுளியில் மடித்த வாயினாள்
பண்டைநாள் இராகவன் பாணி வில்உமிழ்
உண்டைஉண் டதனைத்தன் உள்ளத் துள்ளுவாள்.

13. நாற்கடல் மணிபடு நளினம் பூத்ததோர்
பாற்கடல்ப் படுதிரைப் பவள வல்லியாய்
சேற்கடைக் கண்அளி தேங்கப் பொங்கணை
மேற்கிடந் தாள்தனை விரைவின் எய்தினாள்.

14. எய்தி அக் கேகயன் மடந்தை ஏடவிழ்
நொய்தலர் தாமரை நோற்ற நோன்பினால்
செய்தபேர் உவமைசால் செம்பொற் சீறடி
கைகளில்த் தீண்டினாள் காலக் கோள் அ(ன்)னாள்.

15. தீண்டலும் உணர்ந்தஅத் தெய்வக் கற்பினாள்
நீண்டகண் அனந்தரும் நீங்க கிற்றிலள்
மூண்டெழு பெரும்பழி முடிக்கும் வெவ்வினை
தூண்டிடக் கட்டுரை சொல்லல் மேயினாள்

16. அணங்குவாள் விடஅரா அணுகும் எல்லையும்
குணம்கெடா(து) ஒளிவிரி குளிர்வெண் திங்கள்போல்
பிணங்குவான் பேர்இடர் பிணிக்க நண்ணவும்
உணங்குவாய் அல்லைநீ உறங்கு வாய் என்றாள்.

17. வெவ்விடம் அனையவள் விளம்ப வேற்கணாள்
தெவ்அடு சிலைக்கைஎன் சிறுவர் செவ்வியர்
அவ்வவர் துறைதொறும் அறம்தி றம்பலர்
எவ்விடர் எனக்குவந்(து) அடுப்ப(து) ஈண்(டு) என்றாள்.

18. பராவரும் புதல்வரைப் பயக்க யாவரும்
உராவரும் துயரைவிட்(டு) உறுதி காண்பரால்
விராவரும் புவிக்கெலாம் வேத மேஅன
இராமனைப் பயந்தஎற்(கு) இடர்உண் டோ' என்றாள்.

19. ஆழ்ந்தபேர் அன்பினாள் அனைய கூறலும்
சூழ்ந்ததீ வினைநிகர் கூனி சொல்லுவாள்
வீழ்ந்தது நின்நலம் திருவும் வீந்தது
வாழ்ந்தனள் கோசலை மதியி னால்' என்றாள்.

20. அன்னவள் அவ்வுரை உரைப்ப ஆயிழை
மன்னவர் மன்னனேல்க் கணவன் மைந்தனேல்
பன்னரும் பெரும்புகழ்ப் பரதன் பார்தனில்
என்? இதன் மேல்அவட்(கு) எய்தும் வாழ்(வு) என்றாள்.

21. ஆடவர் நகையுற ஆண்மை மாசுறத்
தாடகை எனும்பெயர்த் தைய லாள்படக்
கோரிய வரிசிலை இராமன் கோமுடி
சூடுவன் நாளை! வாழ்(வு) இ(து) எனச் சொல்லினாள்.

22. மாற்றம் அஃ(து) உரைசெய மங்கை உள்ளமும்
ஆற்றல்சால் கோசலை அன்பும் ஒத்ததால்
வேற்றுமை உற்றிலள் வீரர் வீரன்புக்(கு)
ஏற்றவள் இருதயத்(து) இருக்க வேகொலாம்

23. ஆயபேர் அன்பெனும் அளக்கர் ஆர்த்தெழ
தேய்விலா முகமதி விளங்கித் தேசுறத்
தூயவள் உவகைபோய் மிகச்சு டர்க்கெலாம்
நாயகம் அனையதோர் மாலை நல்கினாள்

24. தெழித்தனள் உரப்பினள் சிறுகண் தீயுக
விழித்தனள் வைதனள் வெய்(து) உயிர்த்தனள்
சுழித்தனள் அழுதனள் சுடர்செய் மாலையால்க்
குழித்தனள் நிலத்தை அக் கொடிய கூனியே

25. வேதனைக் கூனிபின் வெகுண்டு நோக்கி அப்
பேதையைப் பித்தி நிற் பிறந்த சேயொடும்
நீதுயர் படுக நான் நெடி(து)உன் மாற்றவள்
தாதியர்க்(கு) ஆட்செயத் தரிக்கி லேன் என்றாள்

26. மறந்திலள் கோசலை உறுதி மைந்தனும்
சிறந்தநல்த் திருவினில்த் திருவும் எய்தினான்
இறந்திலன் இருந்தனன் என்செய் தாற்றுவான்!
பிறந்திலன் பரதன்! நீ பெற்ற தால் என்றாள்.

27. பாக்கியம் புரிந்திலாப் பரதன் தன்னைப் பண்(டு)
ஆக்கிய பொலன்கழல் அரசன் ஆணையால்
தேக்குயர் கல்லதர் கடிது சேணிடைப்
போக்கிய பொருள் எனக்(கு) இன்று போந்ததால்

28. மந்தரை பின்னரும் வகைந்து கூறுவாள்
அந்தரம் தீர்ந்துலகு அளிக்கும் நீரினால்
தந்தையும் கொடியன் நல்த் தாயும் தீயளால்
எந்தையே பரதனே! என்செய்வாய் என்றாள்

29. அரசர்இல்ப் பிறந்துபின் அரசர் இல்வளர்ந்து
அரசர்இல்ப் புகுந்துபேர் அரசி யானநீ
கரைசெயற்(கு) அருந்துயர்க் கடலில் வீழ்கின்றாய்
உரைசெயக் கேட்கிலை! உணர்தியோ என்றாள்.

30. வாய்க யப்புற மந்தரை வழங்கிய வெஞ் சொல்
காய்க னல்த்தலை நெய்சொரிந் தெனக் கதம் கனற் றக்
கேக யர்க்கிறை திருமகள் கிளர்இள வரி கள்
தோய்க யற்கண்கள் சிவப்புற நோக்கினள் சொல் லும்

31. எனக்கு நல்லை அல்லைநீ என்மகன் பர தன்
தனக்கு நல்லை அல்லை அத் தருமமே நோக்கின்
உனக்கு நல்லை அல்லை வந் தூழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினாய் மதியிலா மனத்தோய்!

32. போதி என்எதிர் நின்றுநின் புன்பொறி நா வைச்
சேதி யா(து) இது பொறுத்தனென் புறஞ்சிலர் அறி யின்
நீதி அல்லவும் நெறிமுறை அல்லவும் நினைந் தாய்
ஆதி! ஆதலின் அறிவிலி! அடங்குதி என் றாள்.

33. அஞ்சி மந்தரை அகன்றிலள் அம்மொழி கேட்டு
நஞ்சு தீர்கிலும் தீர்கிலா (து) அதுநலிந் தென் னத்
தஞ்ச மே!உனக் (கு) உறுபொருள் உணர்த்துகை தவி ரேன்
வஞ்சி போலி! என்(று) அடிமிசை வீழ்ந்துரை வழங்கும்

34. அறம்நி றம்பிய அருளுடை அருந்தவர்க் கே னும்
பெறல ருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறி தாம்
மறம்நி னைந்துமை வலிகில ராயினும் மனத் தான்
இறலு றும்படி இயற்றுவர் இடையறா இன் னல்

35. புரியும் தன்மகன் அர(சு) எனில் பூதலம் எல் லாம்
விரியும் சிந்தனைக் கோசலைக்(கு) உடைமையாம் என் னில்
பரியும் நின்குலப் புதல்வற்கும் உனக்கும்இப் பார் மேல்
உரிய தென்? அவள் உதவிய ஒருபொருள் அல் லால்

36. தூண்டும் இன்னலும் வறுமையும் தொடர்தரத் துய ரால்
ஈண்டு வந்துனை இரந்தவர்க்(கு) இருநிதி அவ ளை
வேண்டி ஈதியோ வெள்குதி யோ விம்மல் நோ யால்
மாண்டு போதியோ மறுத்தியோ எங்ஙனம் வாழ் தி!

37. தீய மந்தரை இவ்வுரை செப்பலும் தே வி
தூய சிந்தையும் திரிந்தது – சூழ்ச்சியின் இமையோர்
மாயையும் அவர்பெற்றுள வரம்உண்மை யா லும்
ஆய அந்தணர் இயற்றிய அருந்தவத் தா லும்

38. அனைய தன்மையள் ஆகிய கேகயன் அன் னம்
வினை நிரம்பிய கூனியை விரும்பினள் நோக் கி
எனைஉ வந்தனை இனியைஎன் மகனுக்கும் அனை யான்
புனையும் நீள்முடி பெறும்படி புகலுதி என் றாள்.

39. மாழை ஒண்கனி உரைசெயக் கேட்டமந் தரை என்
தோழி வல்லள் என் துணைவல்லள் என்றடி தொழு தாள்
தாழும் மன்நிலை என் உரை தலைநிற்பின் உல கம்
ஏழும் ஏழும்உன் ஒரு மகற் (கு) ஆக்குவென் என் றாள்

40. நாடி ஒன்றுனக்(கு) உரைசெய்வென் நளிர்மணி நகை யாய்
தோ(டு)இ வர்ந்ததார்ச் சம்பரன் தொலைவுற்ற வே லை
ஆடல் வென்றியான் அருளிய வரம்அவை இரண் டும்
கோடி! என்றனள் உள்ளமும் கோடிய கொடி யாள்.

41. இருவ ரத்தினில் ஒன்றினால் அரசுகொண்(டு) இரா மன்
பெருவ னத்திடை ஏழிரு பருவங்கள் பெயர்ந்து
திரியச் செய்திமற் றொன்றினால் செழுநிலம் எல்லாம்
ஒருவ ழிப்படும் உன்மகற்(கு) உபாயம் ஈ(து) என் றாள்.

42. உரைத்த கூனியை உவந்தனள் உயிருறத் தழு வி
நிரைத்த மாமணி ஆரமும் நிதியமும் நீட் டி
இரைத்த வேலைசூழ் உலகம்என் ஒருமகற்(கு) ஈந் தாய்
தரைக்கு நாயகன் தாய்இனி நீஎனத் தணியா

43. நன்று சொல்லினை நம்பியை நளிர்முடி சூட் டல்
துன்று கானத்தில் இராமனைத் துரத்தல்இவ் இரண் டும்
அன்ற தாம்எனில் அரசன்முன் ஆருயிர் துறந் து
பொன்றி நீங்குதல் புரிவென்யான் போதி நீ என் றாள்.

44. கூனி போனபின் குலமலர்க் குப்பைநின்(று) இழிந் தாள்
சோனை வார்குழல்க் கற்றையில்ச் சொருகிய மா லை
வான வார்மழை நுழைதரு மதிபிதிர்ப் பாள் போல்
தேன்அ வாவுறு வண்டினம் அலமரச் சிதைத் தாள்

45. விளையும் தன்புகழ் வல்லியை வேர்அறுத்(து) என் னக்
கிளைகொள் மேகலை சிந்தினள், கிண்கிணி யோ டும்
வளைது றந்தனள் மதியினில் மறுத்துடைப் பாள் போல்
அளக வாள்நுதல் அரும்பெறல்த் திலகமும் அழித் தாள்

46. தாவில் மாமணிக் கலன்மற்றும் தனித்தனி சித றி
நாவி நன்குழல் நானிலம் தைவரப் பரப்பி
காவி யுண்கண்கள் அஞ்சனம் கான்றிடக் கலு ழா
பூஉ திர்ந்ததோர் கொம்பெனப் புவிமிசைப் புரண் டாள்.

## அருஞ்சொற்பொருள்

ஆண்டகை - இராமன்

நூல்தடமார்பன் - வசிஷ்டர்

வேகடம் வகுத்தல் - மாசுநீக்குதல்

ஓடை - யானைக்கு இடுகிற நெற்றிப் பட்டம்

தரளம் - முத்து

இம்பர் - இந்த உலகம்

அமலை - கொண்டாட்டம்

நளினம் - தாமரை

தீண்டினாள் - பாம்பு தீண்டியது போல்

| | |
|---|---|
| அனந்தர் | - தூக்கம் |
| வீந்தது | - வீழ்ந்தது |
| வரிசிலை | - இறுக நரம்பிட்டுக் கட்டிய வில் |
| அளக்கர் | - சமுத்திரம் |
| உரப்பினள் | - அதட்டினாள் |
| பித்தி | - பைத்தியக்காரி |
| போதி | - போய் விடுவாயாக |
| அடங்குதி | - வாயை மூடு |
| நலிந்தென்ன | - வருத்தியதென்ன |
| தஞ்சமே | - அடைக்கலமே |
| இறலுறும்படி | - இடிந்து போகும்படி |
| நளிர்மணி | - குளிர்ந்த ஒளிவீசும் முத்து |
| ஆடல்வென்றி | - வெற்றி விழாக் கொண்டாட்டம் |
| உள்ளமும் கோடிய | - உடல் மாத்திரமும் அல்ல வளைந்திருப்பது |
| ஏழிரு பருவங்கள் | - பதினான்கு ஆண்டுகள் |
| ஒரு வழிப்படும் | - உறுதியாக வந்து சேரும் |
| நீட்டி | - கொடுத்து |
| துன்றுகானம் | - மரம் நெருங்கிய காடு |
| பொன்றி | - செத்து |
| தாவில் | - குற்றம் யாதும் இல்லாத |
| கலன் | - அணிகலன் |
| நாவி | - வாசனைத் தைலம் ஏறிய |
| நானிலம் | - தரை |
| தைவரப் | - புரண்டு கிடக்க |
| அஞ்சனம் கான்றிட | - மை கரைந்து ஒழுக |

# இ. சீறாப்புராணம்

தமிழ் இஸ்லாமிய இலக்கியங்களுள் தலைசிறந்து விளங்குவது சீறாப்புராணமாகும். நபிகளின் வரலாற்றினைக் கூறும் இந்நூல் விலாதத்துக் காண்டம், நுபுவத்துக் காண்டம், ஹிஜ்ஜிரத்துக் காண்டம் என்ற மூன்று பிரிவுகளை உடையது. இவற்றில் 92 படலங்களும் 5027 பாடல்களும் உள்ளன. இந்நூலின் ஆசிரியர் உமறுப்புலவர். கி.பி. 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். எட்டயபுரம் சமஸ்தான வித்துவான் கடிகைமுத்துப் புலவரின் மாணவர். வாலைவாருதி என்ற வடநாட்டுப் புலவனை வாதத்தில் வென்றவர். வள்ளல் சீதக்காதியால் ஆதரிக்கப் பெற்றவர். இக்காப்பியத்தின் கவிநயமும், நடையும் கம்பராமாயணத்தைத் தழுவியுள்ளது. சீதக்காதியின் மறைவிற்குப் பின் அபுல்காசீம் மரைக்காயரிடம் உதவி பெற்று காப்பியத்தைப் பாடி முடித்துள்ளார்.

நமக்குப் பாடமாக வந்துள்ள விடம் மீட்ட படலம் ஹிஜ்ஜிரத்துக் காண்டத்தில் அமைந்துள்ளது.

## விடம் மீட்ட படலம்

1. நகரைவிட் டகன்று கான்சூழ்
   நகத்திடத் துறைந்து தேடு
மிகலவர் கண்ணிற் காணா
   திருந்தவ ணிருக்குங் காலைப்
புகலபூ பக்கர் செவ்வி
   மடிமிசைப் பொருந்த வாசந்
திகழ்சிரஞ் சேர்த்தி வள்ளல்
   செழுந்துயில் புரிவதானார்.

2. விடுங்கதிர்க் கனற்கண் வேங்கை
   மெய்யணைச் சிரத்தைச் சேர்த்த
மடங்கலே றென்னச் செவ்வி
   முகம்மது துயிலும் போதி

லிடங்கொளந் தரமு மண்ணு
    மிடனற நெருங்கி விண்ணோர்
நெடுங்கழை வரையைச் சுற்றிக்
    காவலி னிறைந்து நின்றார்.

3. மறைநபி துயிலா நின்ற
    மலைமுழை யதனின் கண்ணே
குறுவளை யனேக மாங்கோர்
    வளையினிற் கொடுங்கண் வெவ்வாய்த்
தெறுநுனைப் புரைப்பற் புண்ணாச்
    சிறுபொறிப் படத்த செஞ்சூட்
டெறுழ்வலிக் கரிய பாந்த
    ளிருந்தலை நீட்டிற் றன்றே.

4. பொரியரைத் தருக்க ளியாவும்
    புதுமலர் சொரியுங் கானின்
கிரியிடைப் பொதும்பர் வாயிற்
    கேசரி யனைய வள்ளல்
வரிதருங் கமலச் செங்கண்
    வளரிடத் தரவு தோன்றக்
கரிமருப் புதிர்க்கும் வெள்வேற்
    கரத்தபூ பக்கர் கண்டார்.

5. படிஅடி பரப்பச் செய்யா
    முகம்மது பரிவு கூர
மடிமிசை துயின்றா ரிந்த
    வளையிடத் தரவுங் கண்டேம்
விடிவதெவ் வாறோ வென்ன
    வெருவிநெஞ் சுளைந்து போர்த்த
பிடவையிற் கிழித்துச் சுற்றிப்
    பேதுறா தடைத்து நின்றார்.

6. அடைத்தவப் புடையை நீக்கி
அகுமதுக் கணித்தாய் வேறோ
ரிடத்துறும் வளையிற் சர்ப்ப
மெதிர்ந்தது கண்டு தேங்கிப்
படத்தினி லொருபாற் கீறிப்
பதுமமென் கரத்தை நீட்டி
விடத்தினுக் கஞ்சி யேதும்
வெளியறப் புகுத்தி னாரால்.

7. மற்றொரு வளையிற் றோன்ற
வடைத்தனர் பொதும்பர் வாயிற்
சுற்றிய வளைக டோறுந்
தோன்றிய துகிலைக் கீறி
முற்றினு மடைத்தா ரோர்பான்
முழையினுக் காடை காணா
துற்றுள மிடைந்து வாடி
யுருகினர் துயிற லோர்ந்தே.

8. ஒருவளை யன்றி யாவு
மடைத்தன முரக மீங்கு
வருமெனின் மறைப்ப யாது
மிலைத்திரு வள்ள லார்நித்
திரைமறுத் திடுத னன்றன்
றெனவுட றிடுக்கிட் டேங்கிப்
பருவரல் சுமந்து நின்றார்
பணிவர வறிகி லாரே.

9. இருமனம் பேதுற் றங்ங
னிருப்பவப் புழையின் கண்ணே
விரிதரு கவைநா நீட்டிக்
கட்செவி விரைவிற் றோன்றப்

பெரியவன் றூதர் தம்பால்
    வருமுனம் பெட்பி னோடு
மொருதிருத் தாளை நீட்டிக்
    காப்பதற் கொருமித் தாரால்.

10. மடிமிசை யிருந்த காந்தி
    மதிமுக மசைந்தி டாமற்
கடிநறைப் பொதுளுஞ் செவ்விக்
    கமலமென் வலத்தா ணீட்டி
விடவர வுறையும் பாலில்
    வெளியணு வளவுந் தோன்றா
திடனற வுள்ளங் கால்கொண்
    டின்புற வடைத்தா ரன்றே.

11. புறப்படற் கரிதாய் வேகம்
    பொங்கிக்கண் சிவந்து சீறி
மறைப்படும் வளைக்கு ளார்ந்த
    வல்லுட னெளித்து நீட்டிக்
குறிப்பொடு கெந்த நான்குங்
    குழைவற நிமிர்த்து வாய்விண்
டுறப்பட வுள்ளந் தாளிற்
    கவ்விய துரக மன்றே.

12. கடிவழி யுதிரஞ் சிந்தக்
    காறளர்ந் தசைந் திடாம
னெடியவன் றூதர் செய்யு
    நித்திரைக் கிடரில் லாமற்
புடையினி லிருந்த சர்ப்பம்
    புறப்படற் கிடங்கொ டாம
லுடலணு நடுக்க மின்றி
    யிருந்தன ருணர்வின் மிக்கார்.

13. மிதிப்படும் வளையிற் காலை
விடுத்திலர் கடித்து மென்னக்
கொதிப்பொடு கந்த நான்குங்
குறைபடச் சீறிச் சீறிப்
பதிப்பொடு முடலை வீங்கிப்
படுவிட மனைத்துஞ் சிந்தி
யதிர்ப்பொடும் வேக மீக்கொண்
டடிக்கடி கடித்த தன்றே.

14. மாசறத் தெளித்த பஞ்சின்
வாய்ப்படு நெருப்புப் போன்றும்
வேசறச் சுட்ட சாம்பற்
மீதுறும் புனலைப் போன்று
மூசிவெள் ளெயிறு சிந்த
முரணராக் கடித்த வாயி
னாசொடும் விடத்தின் வேக
மாகத்தின் முழுது மேற்ற.

15. பன்னருங் கொடிய வேகம்
பரந்துட லனைத்துந் தாக்கிச்
சென்னியிற் பரப்பச் சற்றே
சிந்தையின் மயக்கந் தோன்றத்
தன்னிலை தளரா துள்ளந்
தாளையும் பெயர்த்தி டாம
லந்நிலை யிருந்தார் செவ்வி
யகுமதும் விழித்தா ரன்றே.

16. மதியிடத் திரண்டு செவ்வி
மரைமலர் பூத்த தென்ன
விதியவன் றூதர் கண்கள்
விழித்தபூ பக்கர் தம்மை

யெதிரினி னோக்கச் சற்றே
    மயக்கமுற் றிருந்தார் கண்டு
புதியகா ரணங்க ளேது
    முளதெனிற் புகலு மென்றார்.

17. தடவரைப் பொதும்பி னீவிர்
    தண்மதி கடுப்பச் சார்ந்தென்
மடிமிசை துயில வாதி
    வல்லவ னுரையா லிந்த
நெடுமுழை யதனி னேரா
    நெட்டுடல் வளைக்கும் பாந்தள்
கடிதினிற் தலையை நீட்டக்
    கண்டனன் கவலை கூர.

18. அப்பெரும் பாந்த ளிங்ஙன்
    வருமுன மடைப்பான் வேண்டி
யொப்பரு மதியின் காந்தி
    யுரித்தெனத் துகிலை யென்றன்
கைப்படக் கீண்டுள் ளோடிக்
    கரந்திட வடைத்தே னப்பாற்
றுப்பொடும் வேறு வேறு
    புழைதொறுந் தோன்றிற் றன்றே.

19. இனையன புழைக ளெல்லா
    மரவெழுந் தெதிரத் துன்ப
மனதினிற் படரச் சோதிக்
    கலையினை வலிதின் வாங்கி
நனிபெறக் கீண்டு கீண்டு
    நலந்தர வடைத்து நின்றேன்
குனிசிலைத் தழும்பின் கையாய்
    கொடும்புழை யொன்றல் லாமல்.

20. முடங்கிநீண் டிருளுள் ளார்ந்த
முழையொன்றிற் றலையை நீட்டத்
தடங்கொள்கோ டிகமில் லாதாற்
றாளினை நிமிர்த்துக் காலுந்
தொடங்கிலா வண்ண நீங்கா
தடைத்தனன் றுளைப்பற் பாந்தள்
விடங்கள்கான் றரிதிற் சீறி
வெகுளியிற் கடித்த தன்றே.

21. ஊறுபட் டுதிரங் கால
வலதுளந் தாளைப் பற்றி
மாறிலா தின்னுந் தீண்டி
வாங்கிய தகனா லுள்ளம்
வேறுபட் டிமைப்பி னேர
மெய்மயக் குற்றே னென்று
மீறிலான் றூதே யிங்ஙன்
விளைந்தவா றிதெனச் சொன்னார்.

22. அடலுறு மரியே றென்னு
மபூபக்க ருரைப்பக் கேட்டுப்
படர்பரு வரலுற் றாகி
யளித்திடும் பயனு மோர்ந்து
புடையினிற் பொருத்துந் தாளைப்
பெயர்த்திடு மெனப்பு கன்றார்
வடிவினி னிகரின் றென்ன
வந்தமா முகம்ம தன்றே.

23. தரைத்தலம் புகல வீரந்
தகத்தமை நினையா நீட்டு
மரைத்தடப் பதத்தை மெல்ல
வாங்கினர் வாங்கச் சோதி

விரித்தசூட் டெரிகட் பாந்தள்
விளங்கிய வளையை நீங்கித்
துருத்திநீர் வெளிவிட் டென்ன
விரைவொடுந் தோன்றி நின்ற.

24. நெட்டுடன் முடக்கி வாய்ந்த
கழுத்தையு நிமிர்த்து நின்ற
விட்டறா விடத்தின் பாந்த
டனைவிழித் தெதிர்ந்து நோக்கி
வட்டவா ருதிசூ ழெட்டுத்
திக்கினு மணிவா னத்து
மெட்டிய கீர்த்தி கொண்டோ
ரினியன மொழிகள் சொல்வார்.

25. அருமறைப் பொருளாய் நின்றோ
னமைத்தபன் னகமே யாங்கள்
வரையினோ ரிடுக்க ணுற்று
வந்திருந் தனமல் லாமற்
பரிவுட னுனக்கி யாது
குற்றமும் பயின்ற துண்டோ
தரையினெம் முன்னோர் முன்னா
ளியற்றிய தவறு முண்டோ.

26. ஏதொரு குறையுஞ் செய்த
தின்றிவை யிகழ்ந்தெண் ணாம
னீதமில் லவரைப் போல
நெடும்புடை யதனின் வந்து
தீதுறக் கொடிய வேகந்
தலைக்கொளச் சினந்து சீறி
வேதனைப் படவாய் வைத்த
தென்னென விரைவிற் கேட்டார்.

27. மறையின் வாயுரை கேட்டெழின் முகம்மதை நோக்கி
நிறுவி நின்றிடு நெடுந்தலை நிலத்திடை சேர்த்தி
முறைமை யின்சலா முரைத்துமுள் ளெயிற்றுவாய் திறந்து
குறைவி லாதுளத் திருந்தவை யனைத்தையுங் கூறும்

28. ஆதி நாயகன் றிருநபி யேயிவ ணடியே
நீதி யன்றியே தீண்டின னலனெடுங் காலம்
பூத ரத்தினெம் முன்னவர் சிலமொழி புகன்றா
ரேதெ னச்செவி கொடுத்திட வேண்டுமெய் யெழிலோய்.

29. செவ்வி நாயகன் றிருவொளி வினிலுருத் திரண்டு
குவ்வி டத்தினி லுதித்தரும் புதுமையிற் குலவி
யவ்வி யங்களைந் தகுமது நபியென வழகா
யெவ்வெ வர்க்குநன் மறைநெறி நடத்துவ ரெனவும்.

30. அவர்க்கு நல்வழி யாயிசு லாமினி லானோர்
சுவர்க்க மெய்துவ ரெனவுமச் சொல்லினைக் கடந்தோர்
பவக்க டற்கிடந் தலைகுவ ரென்னவும் பரிவி
னுவக்கும் வெற்றுருச் சமயங்க ளொழிந்திடு மெனவும்.

31. பொருவி லாக்கடற் புவிநடு மக்கமா புரத்தி
னரிய நாயகன் றிருமறை விளக்கியங் கிருந்திவ்
வரையி னுந்தனி வருகுவ ரென்னவு மதீனாத்
திருந கர்க்கர சிருந்துதீன் றிருத்துவ ரெனவும்.

32. இனைய வாசக மனைத்தையு முணர்ந்துளத் திருத்திக்
கனியுஞ் சிந்தையுங் கண்களுங் களிப்புற நோக்கிப்
புனித மாகுவ தென்றெனத் தினந்தொறும் பொருவா
நினைவி நேர்வழித் தவத்தொடு மிருந்தன னெடுநாள்.

33. இற்றை யின்முதன் மூன்றுநாட் டொடுத்திறும் பிடத்திற்
குற்ற மற்றபே ரொளியொடு மான்மதங் குலவி
வற்று றாப்புது மணத்தொடுங் கமழ்ந்தன மனத்தி
னுற்றி தேதெனக் குறித்திடா தொருவளை யுறைந்தேன்.

34. அந்த ரத்தினு நிலத்தினும் பெருங்குவ டனைத்தும்
வந்து வானவர் புகழ்தர வருஞ்சல வாத்தைச்
சிந்தை கூர்தரப் புகல்வது கேட்டுளந் தேறி
எந்தம் நாயக ரிவணுறைந் தனரென விசைந்தேன்.

35. தொல்லை வல்வினைத் தொடர்பவங் களைந்துநற் சுவனத்
தெல்லை யின்பதங் கிடைத்ததின்றெனத் தவழ்ந் தேகி
வொல்லை யிற்குவ டடங்கலுந் தேடின னொளிருங்
கல்ல கத்துழை கண்டன னிருவிழி களிப்ப.

36. வரைமு ழைச்சிறு வாயிலிற் சிலம்பி நூன் மறைப்ப
விரிசி றைப்பு விருப்பது நோக்கினன் விரைவிற்
பெருகுங் காப்பழித் திடுவதன் றெனப்பிரிந் தொதுங்கிப்
புரைய றத்தனி மற்றொரு வளையினிற் புகுந்தேன்.

37. சிறுப்பு ழைக்குளென் னெட்டுட லொடுங்கிடச் செருகிப்
புறப்படுந்திசை யனைத்தையு மடைத்தனர் புழுங்கி
வெறுப்பொ டுமிருந் தொருவயின் மேவினன் விரைவின்
மறைப்ப டத்தடத் தாள்கொடவ் வளையையு மறைத்தார்.

38. வரையி னிற்புற மகலவும் வழியிலா துமது
திரும லர்ப்பதங் காணவுஞ் செயலிலா தழிந்து
முரித ரும்படிக் குவட்டுளை யிடந்தொறு முடங்கித்
திரித லல்லது வெளிப்பட லரிதெனத் திகைத்தேன்.

39. போது தற்கிட மன்றியும் புதியநா யகன்றன்
தூத ரைத்தெரி சித்திட வரும்வழி தூர்த்த
பாத கத்தையு நினைத்துமைக் கொடுவிடம் பழுத்த
தீது றுங்கொடிற் றெயிற்றறக் கடித்தனன் சிறியேன்.

40. நெடிய காலமுற் றொருபல னினைத்தவர்க் கடுத்து
முடியும் போழ்தினிற் றடுப்பவ ரெவரையு முரணித்
தடித னன்றெனு மறிவினாற் றடிந்ததே யன்றிப்
படியி னேர்தவ றிலனென வுரைத்தது பாந்தள்.

41. பாந்தள் கூறிடக் கேட்டலும் பதுமமென் மலரிற்
சேந்த பொன்முகக் குளிர்ப்பொடுங் களிப்பொடுஞ் சிறப்ப
வாய்ந்த வாய்மையின் விளித்தரு குறவர வழைத்துக்
கூர்ந்த தம்மனத் துவகையிற் சிலமொழி கொடுப்பார்.

42. நெறியு ரைத்தனை கண்டனை நிலநெடுங் காலத்
துறவு கொண்டனை பவத்துடர் துன்பமு மொழித்தாய்
குறைவ றப்பலன் படைத்தனை வாழ்ந்துநின் குலத்தோ
டுறைக எனப்புக ழொடுமுரைத் தனர்மறை யுரவோர்.

43. வேத நாயக ருரைத்தலும் விடத்தெயிற் றரவம்
பாத மென்மல ரிடத்தினிற் சிரங்கொடு பணிந்து
கோத றக்கலி மாவெடுத் தோதிமெய் குழைத்துப்
பூத ரத்துறு நெடுவளை யிடைப்புகுந் ததுவே.

44. அரவ கன்றபி னெழிலபூ பக்கர்செம் மலர்த்தாள்
விரித ருங்கடி வாயினிற் கொடுவிட மகல
மரையி தழ்த்துளி நீரினை விரலினால் வாங்கிப்
புகர றத்தட வினர்செழும் புகழ்முகம் மதுவே.

45. இருள கற்றிய கதிரவன் கதிரென விதழிற்
பரிவு பெற்றிடு மமிர்தநீ ருடலெலாம் பரந்த
கரிய வெவ்விட மனைத்தையு மணுவறக் கடிந்து
சொரியுங் காந்திகொண் டரியமெய் மாசறத் துடைத்த.

46. பன்ன கக்கொடு விடப்பெரும் பருவர றீர்ந்து
மின்னு செங்கதிர் வேலபூ பக்கரும் விறலார்
மன்னர் மன்னவர் முகம்மது நபியுடன் வரையி
னின்னி சைப்புக ழொடும்புதி யனைத்தொழு திருந்தார்.

## அருஞ்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| இகலவர் | - | பகைவர் |
| செவ்வி | - | அழகிய |
| மெய்அணை | - | உடல் எனும் பஞ்சணை |
| குறுவளை | - | குறுகுதல் உடைய பொந்துகள் |
| கரியபாந்தள் | - | கருநாகப் பாம்பு |
| படி | - | பூமி |
| வெருவி | - | எண்ணி |
| உரகம் | - | பாம்பு |
| கடி | - | மணம் |
| நறை | - | தேன் |
| கெந்தம் | - | விடம் |
| நெடியவன் | - | ஆண்டவன் |
| தடவரை | - | பெரியமலை |
| பொதும்பில் | - | குகைக்குள் |
| புழை | - | பொந்து |
| கலையினை | - | ஆடையை |
| மணிவானத்தும் | - | உடுக்கள் நிறைந்த வானத்தினும் |
| குலவி | - | திளைத்து |
| பொருவிலா | - | ஈடிலா |
| திருமறை | - | திருக்குர் ஆன் |
| சிலம்பி | - | சிலந்திப் பூச்சி |
| சோதுஅற | - | தெளிவு பட |
| கலிமா | - | இஸ்லாமிய மூல மந்திரம் |
| அமிர்தநீர் | - | அமுதம் ஆகிய உமிழ்நீர் |
| பன்னகம் | - | பாம்பு |

# ஈ. தேம்பாவணி

*- வீரமாமுனிவர்*

தேம்பாவணி இயேசுவின் தந்தை தூயவளனாரை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டுள்ளது. 3 காண்டங்களையும் 36 படலங்களையும் 3615 பாடல்களையும் கொண்டது. தேம்பாவணி, தேன்+பா+அணி= தேன் போன்ற இனிய பாக்களால் அமைந்த நூல் என்றும், தேம்பா + அணி = வாடாத மாலை. பல பா மலர்களால் தொடுக்கப்பட்ட மாலை என்றும் பொருள் கொள்ளலாம்.

தேம்பாவணிக் காப்பியத்தில் 105 திருமறை பின்னணிச் செய்திகளை அறிய முடிகின்றது. சூசை, மரியாள், திருமகன் பிறப்பு, இளமை, வளர்ச்சி, துறவுநிலை, சூசை மரியாள் திருமணம், நடத்திய முறை, ஈரறம் இணைந்த ஓரறம், எகிப்தில் ஏழாண்டு வாழ்க்கை, இயேசுவின் 26ஆம் வயதில் சூசையின் மரணம், பேயின் தந்திரங்கள், நரகம், இருள், உத்தானம் பாதலம், விண்ணுலகு, இயேசு சூசை உயிர்த்தெழுதல், சூசைக்கு ஆலயம் அமைத்தல் போன்ற பல புதிய செய்திகளையும் விளக்கங்களையும் அறிய முடிகின்றது.

இங்கு நமக்குப் பாடமாக அமைந்துள்ள பைதிரம் நீங்கு படலம் இரண்டாம் காண்டத்தில் இடம்பெறுகிறது.

## 1. பைதிரம் நீங்கு படலம்

### முன்னுரை

களிமுகத்தின் இவையாகி, பைம்பூ மேய்ந்த கனலொப்பச்
சுளிமுகத்தின் உற்றதுயர் உள்ளம் வாட்டித் துகைத்து, அன்னார்
வளிமுகத்தின் விளக்கன்ன மயங்கி ஏங்க வந்தவை, யான்
கிளிமுகத்தின் கிளவியொடு விரும்பி, இங்கண் கிளத்துகிற்பேன் 1

### சூசையும் மரியும் கோவிலுக்குப் போய் வருதல்

பூந்தாமக் கொம்பனையாள், பூத்த பைம்பூ, முகை முகத்தில்
தேன்தாமத் திருமகன் நேர்ந்து இன்னும் எண்ணாள் செல, அன்னார்
தாத்தாம் அக் கடிநகர்க்கண் தங்கல்உள்ளி, நாள்தொறும் பொற்கு
ஆம் தாமக் கோயில்விழா அணியின் வெஃகி, கனிசேர்வார். 2

## சூசையின் உறக்கத்தில் வானவன் வந்து, எசித்து நாடு செல்க எனல்

நெஞ்சுபதி கொண்ட அருள் எஞ்சா நீரார், நிறைந்து ஐந்நாள்,
மஞ்சுபதி கொண்டமலை ஒத்த, பைம்பூ மணிப்புகைசூழ்
விஞ்சுபதி கொண்(டு) அமரர் வைகும் கோயில் மேவிய பின்,
நஞ்சுபதி கொண்ட உரைத் தூது, வானோன் நவின்றடைந்தான் 3

கான்வயிறுஆர் பூங்கொடியோன் உறங்குங்காலை, கதிர்தும்மி,
மீன்வயிறுஆர் உருக்காட்டிவிண் ணோன்எய்தி, "விரைக்கொடியோய்,
ஊன்வயிறுஆர் வேல்வேந்தன், இளவல் கோறல் உள்ளினன், நீ
தேன்வயிறுஆர் இப்பதிநீத்து, எசித்து நாட்டைச் செல்(கு)" என்றான். 4

### சூசை துயருறல்

அழல்குளித்த பைந்தாதோ, கண்பாய் வேலோ, அகல்வாய்ப்புண்
புழல்குளித்த செந்தீயோ, உருமோ, கூற்றோ, பொருவின்றி
நிழல்குளித்த உருவானோன் கொஞ்சொல் கேட்டு, நெடுங்கடல் நீர்ச்
சுழல்குளித்த மனம் சோர்ந்து, வளன், அப்பணியைத் தொழுது உளைந்தான். 5

மலிநிழல்பட்டு அலர் மலரின் நொய்அம் சேயின் மழவினையும்,
பொலிநிழல்பட்டு அலர் பூங்கொம்பு ஒத்தாள் நொய்வும், புரைவினையால்
அலிநிழல்பட்டு எரிஎசித்தார் நாட்டின் சேணும், ஆய்ந்தவளன்
புலிநிழல்பட்டு ஏங்கியமான் போல ஏங்கிப் புலப்பினனால். 6

அறிவின்மை, உறவின்மை, அறத்தின் இன்மை, அங்கண்செல்
நெறியின்மை, நெறிதொலைக்கும் உறுதியின்மை, நெறிதன்னில்
பறியின்மை, சார்பின்மை, தன்பால் இன்மை பரிசல்லால்
பிறிதின்மை, ஓர்ந்து, உளைந்தான்; உளைந்தும் ஈண்டே பிரிவுற்றான் 7

## எசித்துக்குப் புறப்படுதல்

### சூசை ஆண்டவன் கட்டளையை மரியாளிடம் கூறுதல்

வேரிஅந் தாரினான் விரைந்து எழுந்தனன்;
மாரிஅந் தாரையின் வளர்கண் தாரை நீர்
நேரி,அந் துணைவியை நேடி, நாயகன்
தேரி, அங்கு ஏவிய பணியைச் செப்பினான். 8

## மரியாளின் வாட்டம்

செய்இதழ்த் தாமரை பழித்த சீறடித்
துய்இதழ்த் துப்புஅவிழ் சுருதி வாயினாள்,
ஐஇதழ்த் தாரினான் அறைய, தீமுனர்
நொய்இதழ்த் தாதுஎன நொந்து, வாடினாள். 9

## இருவரும் மனந்தேறித் திருக்குழந்தையின் ஆசிகேட்டுப் புறப்படுதல்

எதிர்இலான், பகைஇலான், இணையெலாம் இலான்,
உதிர்இலா மதுகையான், உணர்வின் மேல்நின்றான்,
'விதிர்இலா விதியிது' என்று இறைஞ்சி வேண்டினர்;
பிதிர்இலாத் திருவுளம் பேணித் தேறினார். 10

தேரிய மனத்தவர் தேறி, நாயகன்
ஆரிய முகத்துஉறை அங்கண் ஏகினார்;
நீரிய முகில் எனப் படத்தை நீக்கலால்,
சூரியன் நவிஎனத் தோன்றல் தோன்றினான். 11

முப்பொழுது ஒருபொழு தாக முற்று உணர்ந்து,
எப்பொழுது அனைத்தும்எப் பொருஎி யாவிலும்,
மெய்ப்பொருள் தெளித்து அவிர் காட்சி மேன்மையான்,
அப்பொழுது உறங்கினான்--அன்னப் பார்ப்பனான். 12

"கலைமுகந்து அருந்திய புலமைக் காட்சியோய்!
'அலைமுகந்து அருந்திய அருள்' என்று, உன்பணி,
கொலைமுகம் தரும்துயர் கொண்டும் செய்வல்" என்று
உலைமுகம் தரும்தழற்கு உருகி, ஏந்தினாள். 13

ஏர்வளர் அடிபணிந்து இளவல் ஏந்தலின்,
நீர்வளர் குவளைதேன் துளித்தல் நேர், அவன்
சீர்வளர் விழிமலர் சிறந்து முத்துஉக,
சூர்வளர் மனத்தவர் துகைத்து உள் ஏங்கினார். 14

கதிர்தரும் காதலன், கன்னித்தாய் உரத்து
எதிர்தரும் விழிகலந்து, இனிதிற் சாய்ந்தனன்;
முதிர்தரும் அமிர்துஉக, முறுவல் கொட்டலால்.
பொதிர்தரும் இன்பமுற்று, இருவர் பொங்கினார். 15

பொங்கிய அருத்தியால் பொலிந்த கன்னியும்,
தங்கிய கொடியொடு, உள் தளிர்த்த சூசையும்,
பங்கய மலரடி பணிந்து, பாலனை,
அங்குஇவர் அகலுதற்கு ஆசி கேட்டனர். 16

மருந்து அடக் கனிமுகம் மகிழ்ந்து, நாயகன்,
அருந்தடத்து அவர்க்குநல் லருளோடு, ஆசியைத்
தரும்; தடத்து இவர்ந்து, இருள் புதைத்த சாமத்தாங்கு
இருந்தடத்து ஏகுதற்கு எழுந்து போயினார். 17

## வானவர் புடைசூழ்ந்து செல்லுதல்

இருச்சுட ரோன்பட, ஈரையாயிரம்
குருச்சுடர் மேனியைக் கொண்ட வானவர்,
திருச்சுட ரோன்எனச் சிறுவன் தாள்இணை
பருச்சுடர் பாய்ந்துறப் பணிந்து தோன்றினார். 18

எல்இயல் படச்சுடர் இரவில் தோற்றினார்;
பல்லியம், கடல்ஒலி படமு ழக்கினார்;
அல்லிஅம் குழவியை அளவில் வாழ்த்தினார்;
கல்லியம் பாத்தொடை கனியப் பாடினார். 19

## திருக்குடும்பம் நீங்கிய நகரின் நிலை

### உயிர் நீங்கிய உடம்பு

வார்வளர் முரசும் ஆரா; வரிவளர் வளையும் ஊதா;
தேர்வளர் உருளும் செல்லா; தெருவளர் அரவும் தோன்றா;
ஊர்வளர் அசைவும் இல்லா; உறங்கிய சாமத்து ஏகிச்
சீர்வளர் உயிர்போய், அவ்வூர் —செத் (து) உடம்பு ஒத்த தன்றே. 20

## நலமெலாம் நீங்குதல்

நல்வினை உலந்த போழ்தில் நலமெலாம் அகல்தல் போலக்
கொல்வினை அறுப்ப வந்த குணத்தொகை இறைவன் போக,
வல்வினை மருளில் பொங்கும் அல்லவை உயிரை வாட்ட,
புல்வினை மல்கிச் சீலம், புரிநலம் போயிற் றன்றே. 21

இருள்புரி கங்குல் நாப்பண் இரிந்து, அறக் கடலோன் போக,
அருள்புரி உணர்வு, காட்சி, அறம், தவம், சுருதி, தானம்,
தெருள், பொறை, நீதி, வீரம், சீர்தகை, உறுதி, ஞானம்,
பொருள், புகழ், புலமை, மற்றப் பொலிநலம் போயிற்றன்றே. 22

## பாவ இருள் துன்பம் தீவினை முதலியன குடிபுகுதல்

அலைபுறம் கொண்ட ஞாலத்து அடர்இருள் நீக்க, யாக்கை
நிலைபுறங் கொண்ட ஞான நெடுஞ்சுடர் அனையான் போக,
கொலைபுறங் கொண்ட வேந்தன் குணத்துஉரி நகரும், நாடும்,
வலைபுறங் கொண்ட பாவம் மலிந்து, இருள் மொய்த்தது அன்றே. 23

கதிதள்ளி, உயர்வான் ஏற்றும் கனிந்ததம் வேந்த னோடும்
பதிதள்ளி அமரர் போகப் பகையும் நீள்பசியும், நோயும்,
நிதிதள்ளி மிடியும், கேடும், நிசிதமும், தீய யாவும்,
மதிதள்ளி மருட்டும் பேயும் மறுகுடி யாயிற்று அன்றே. 24

மணிவளர் முகில்தண் ஊர்தி, வான்உடுக் கொடி, தண்திங்கள்
அணிவளர் குடை கொண்டு, எங்கும் அருள் நிழல் மன்னன் போக,
பணிவளர் நகரும் நாடும் பனிப்புறப் பகைத்து வாட்டி,
பிணிவளர் வினையின் செந்தீ, பிரிவிலா மேய்ந்தது அன்றே. 25

## நகருக்கு வெளியில் இயற்கைப் பொருள்கள் இரங்குதல்

### அகழி அலை

கண் அகன்ற அகழி கலங்கலின்,
தண் அகன்ற தரங்கம் தளம்பலே,
எண் அகன்ற குணத்துஇவர் 'நின்மின்' என்று,
முண் அகன்ற கை நீட்டினது ஒத்தவே. 26

## அகழியிலுள்ள மலர்கள்

அலைஅலைந்து அலர் கூப்பிய தாமரை
இலை, அலைந்து அலை மீதெழுந்து ஆடல், அந்
நிலைஅடைந்தனர், "நீங்கிலிர் நின்மின்" என்று,
உளைவடைந்து, கை கூப்பியது ஒத்தவே. 27

## பிறைச் சந்திரன் தோற்றம்

நாகநெற்றியின் நன்மணி ஓடைபோல்,
நாகநெற்றியின் நன்மணி ஆறுபாய்
நாகநெற்றியின் நன்மலர்க் கா, அப்பால்
நாகநெற்றியின் நன்மதி தோன்றிற்றே. 28

"உறை கிடந்தவிண் வேந்து, உயிர் உண்பல்" என்று
உறைகிடந் (து) அயில் ஓங்கு அரசைப் பகைத்து,
உறைகிடந்த கடற்பறைக்கு, ஓர் குணில்
உறைகிடந்தன ஒண்பிறை தோற்றமே. 29

## விண்மீன்களின் தோற்றம்

சிதம்மிடைந் (து) அலர்ச் சேடனையாள் கையில்,
சிதம்மிடைந் (து) அலர் சேடனை நோக்குப,
சிதம்மிடைந்து அலர் சேடெனத் தாங்கு, பல்
சிதம்மிடைந்து அவர் சேடுகண் ஒத்தவே. 30

## சூசை மரியின் வருத்தம்

மனவுஅணங்கு வணங்குஅடி நாயகன்,
மனஅணங்கு வணங்கில் வருந்தினார்;
மனஅணங்கு வணங்கல்இ லாளனும்,
மனவுஅணங்கு வணங்கும் அணங்குமே. 31

## கோழியின் துயர்

ஆரணம்தரும் ஆண்டகை ஆகுலம்
காரணம்தரும் கண்புனல் கண்டு, இடர்
பூரணம்தரும் மார்பு புடைத்து, எலா
வாரணம்தரும் வானுறக் கூக்குரல். 32

### வானமும் சோலையும் வருந்துதல்

பேர்ந்த தன்பெரு மான்அடை பீழை, வான்
ஓர்ந்த தன்மை உழைந்து அழு தால்என
வார்ந்த தண்பனி தாரையின் மல்கி, அன்று
ஆர்ந்த பைந்தழைக் கா-அழு தாயதே. 33

### பறவைகளின் அழுகை

கறாகறாஎனக் காடை கலுழ்ந்தன;
ஞறாஞறாஎனத் தோகைகள் நைந்தழும்;
புறாகுறாவுத லோடு, இவர் போதலால்,
அறாநறாப்பொழில் ஆர், அழும் ஓதையே. 34

கிளிஅழக் குயில் கேட்டழத், தேன்உணாது
அளிஅழச், சிறை நைந்தழ, 'ஆ' என
வளிஅழத், துயர்மல்கி, வனத்து எலா
உளிஅழத், தக வோர்அழ, ஏகினார். 35

### துயரம் விளைத்த மறதி

கான்மறந்தன காமலர்; அன்னதே
தேன் மறந்தன தேன்இனம்; அன்னதே
பால் மறந்தன மான்பறழ்; அன்னதே
ஆன் மறந்தன தம்பிள்ளை; அன்னதே. 36

### கீழ்த் திசை சிவத்தல்

'சுருதி ஏந்து சுதன் துமிப்பேன்' எனக்
கருதி ஏந்து குரோதம் கதித்தென,
பருதி ஏந்து படம், படராமுனர்,
குருதி ஏந்து குணக்கு சிவந்ததே. 37

முழவு எழும்தொனி ஒப்ப,முந் நீர்ஒலி
எழ, எழுந்துபொரக் கதிர் எய்சரம்
விழ எழுந்த வெய்யோன் சிவந் தெய்தி,வான்
அழ எழும் துயர், ஆற்றில தோன்றிற்றே. 38

### இரங்காதவர்

பானும், பானொடு பாசறை பட்டமும்;
வானும், வானொடு மண்ணும் இரங்கின
--தேனும், ஏதும் உணர்கில மாக்களும்,
கோனும், கோடனை கொண்டு, இரங்காயினார். 39

## அருஞ்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| பைதிரம் | - | நாடு |
| கிளிமுகத்தின் கிளவி | - | கிளிமொழி |
| கான் | - | வாசனை |
| மழவினை | - | இளமை |
| புரை | - | பாவம் |
| பறி | - | பொன் |
| இன்மை | - | வறுமை |
| வேரி | - | வாசனை |
| துப்பு | - | பவளம் |
| மதுகை | - | வலிமை |
| பிதிர் | - | சிதைவு |
| சூர் | - | அச்சம் |
| உரம் | - | மார்பு |
| எல் | - | பகல் |
| அல்லி | - | ஆம்பல் |
| கல்லியம் | - | தேன் |
| நாப்பண் | - | நடுவில் |
| தரங்கம் | - | அலை |
| நாதம் | - | யானை |
| அயில் | - | வேல் |
| ஆகுலம் | - | துன்பம் |
| வாரணம் | - | கோழி |
| சிறை | - | அன்னம் |
| பறழ் | - | குட்டி |
| ஆற்றில | - | பொறுக்கமாட்டாமல் |
| பாசறை | - | துன்பம் |
| கோடனை | - | கொடுமை |

# நான்காம் பருவம்

# தாள் 4

# பண்டைய இலக்கியங்களும் நாடகமும்

# நான்காம் பருவம்

## தாள் 4 : பண்டைய இலக்கியங்களும் நாடகமும்

## அலகு - 1

## அ. நெடுநல்வாடை

நக்கீரர் பாடியது. 188 அடிகள் கொண்டது. பாண்டியன் நெடுஞ்செழியனைப் பற்றியது. பகைமேற் சென்றுள்ள தலைவன் பிரிவால் வருந்தும் தலைவியின் துயர்தீர, அவன் பகை வென்று வருவானாக என்று அரசவை பெண்டிர் கொற்றவையை வழிபடுவதாக அமைவது. நெடிதாகிய நல்வாடை என விரிகிறது தலைப்பு. எவருக்கும் பொதுவாக உள்ள வாடைக்காற்று பிரிவுத் துயருறும் தலைவிக்கு நெடிய வாடையாகவும் போர்ச்செயலில் சிந்தை மறந்த தலைவனுக்கு நல்ல வாடையாகவும் விளங்குகிறது. பாட்டில் எவ்விடத்தும் எவர் பெயரும் வரவில்லை. அகப்பொருள் கெழுமிய பாட்டுதான். ஆயினும் "வேம்புதலை யாத்த நோன் காழ் எஃகம்" என்ற வரியில் பாண்டியனின் வேம்பம்பூ கூறப்பட்டிருத்தலான் இதனைப் புறப்பாட்டாகக் கருதினர். கூதிர்காலக் குளிரின் கொடுமை, அரண்மனை அமைப்பு, கட்டிலின் அழகு, தலைவியின் பிரிவுத்துயர், அது போக்கத் தோழியரும் செவிலியரும் ஆற்றும் செயல்கள். கூதிர் காலத்தில் மாவும் புள்ளும் மக்களும் குளிரால் துயருறும் பகுதி. பாண்டிமாதேவி பிரிவால் வருந்தி புனையா ஓவியம் போல் இருத்தல். யவனர் இயற்றிய பாவை விளக்கும், மிலேச்சர் நகரினைக் காவல் புரிவதும் குறிப்பிடப்படுகின்றன. இப்பாட்டான் பழந்தமிழரின் செல்வச் செழுமையை நன்கறியலாம். கலையழகும் இலக்கிய நயமும் மிக்க இப்பாட்டு பத்துபாட்டிலேயே தலைசிறந்த பாட்டு எனலாம்.

## கோவலர் வாடையால் துன்புறுதல்

வையகம் பனிப்ப, வலன் ஏர்பு வளைஇ,
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென,
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்,
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பி,
புலம்பெயர் புலம்பொடு கலங்கி, கோடல்

நீடு இதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ,
மெய்க்கொள் பெரும்பனி நலிய, பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க

## கூதிர்க்கால நிலை

மா மேயல் மறப்ப, மந்தி கூர
பறவை படிவன வீழ, கறவை
கன்று கோள் ஒழியக் கடிய வீசி,
குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள்

## ஊரினது செழிப்பு

புன் கொடி முசுண்டைப் பொதிப்புற வான் பூ,
பொன் போல் பீரமொடு, புதல் புதல் மலர,
பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி,

இருங்களி பரந்த ஈரவெண்மணல்
செவ்வரி நாரையொடு, எவ்வாயும் கவர
கயல் அறல் எதிர, கடும் புனல் சாஅய்
பெயல் உலந்து எழுந்த பொங்கல் வெண்மழை
அகல் இரு விசும்பில் துவலை கற்ப;

அங்கண் அகல்வயல் ஆர்பெயல் கலித்த
வண்தோட்டு நெல்லின் வருகதிர் வணங்க;
முழு முதல் கமுகின் மணிஉறழ் எருத்தின்
கொழுமடல் அவிழ்ந்த குழூஉக்கொள் பெருங்குலை
நுண் நீர் தெவிள வீங்கி, புடை திரண்டு

தெண் நீர்ப் பசுங்காய், சேறு கொள முற்ற;
நளிகொள் சிமைய விரவுமலர், வியன் காக்
குளிர் கொள் சினைய குரூஉத்துளி தூங்க

### முழுவலி மாக்கள் தெருக்களில் சுற்றித் திரிதல்

மாடம் ஓங்கிய மல்லல் மூதூர்
ஆறு கிடந்தன்ன அகல் நெடுந் தெருவில்,

படலைக் கண்ணி, பரு ஏர் எறுழ் திணிதோள்,
முடலை யாக்கை, முழுவலி மாக்கள்
வண்டு மூசு தேறல் மாந்தி, மகிழ் சிறந்து,
துவலைத் தண் துளி பேணார், பகல் இறந்து
இரு கோட்டு அறுவையர், வேண்டுவயின் திரிதர

### மாலைக் காலத்தில் பெண்கள் தெய்வத்தை வணங்குதல்

வெள்ளி வள்ளி வீங்கு இறைப் பணைத் தோள்,
மெத்தென் சாயல், முத்து உறழ் முறுவல்,
பூங்குழைக்கு அமர்ந்த ஏந்து எழில் மழைக்கண்,
மடவரல் மகளிர் பிடகைப் பெய்த
செவ்வி அரும்பின் பைங்கால் பித்திகத்து,

அவ்இதழ் அவிழ் பதம் கமழ, பொழுது அறிந்து,
இரும்பு செய் விளக்கின் ஈர்ந்திரி கொளீஇ,
நெல்லும் மலரும் தூஉய், கை தொழுது,
மல்லல் ஆவணம் மாலை அயர

**கூதிர்க் காலம் நிலைபெற்றமையால் நேர்ந்த விளைவுகள்**

மனை உறை புறவின் செங்காற் சேவல்
இன்புறு பெடையொடு மன்று தேர்ந்து உண்ணாது,
இரவும் பகலும் மயங்கி, கையற்று,
மதலைப் பள்ளி மாறுவன இருப்ப,
கடியுடை வியல் நகர்ச் சிறுகுறுந் தொழுவர்,
கொள் உறழ் நறுங்கல், பல கூட்டு மறுக,

வடவர் தந்த வான் கேழ் வட்டம்
தென்புல மருங்கில் சாந்தொடு துறப்ப,
கூந்தல், மகளிர் கோதை புனையார்,
பல் இருங் கூந்தல் சில்மலர் பெய்ம்மார்,
தண் நறுந் தகர முளரி நெருப்பு அமைத்து,

இருங்காழ் அகிலொடு வெள் அயிர் புகைப்ப,
கைவல் கம்மியன் கவின் பெறப் புனைந்த
செங்கேழ் வட்டம் சுருக்கி; கொடுந்தறி
சிலம்பி வால் நூல் வலந்தன தூங்க;
வான் உற நிவந்த மேல் நிலை மருங்கின்,

வேனில் பள்ளித் தென்வளி தரூஉம்
நேர் வாய்க் கட்டளை திரியாது, திண் நிலைப்
போர் வாய்க் கதவம் தாழொடு துறப்ப;
கல்லென் துவலை தூவலின், யாவரும்
தொகுவாய்க் கன்னல் தண்ணீர் உண்ணார்,

பகுவாய்த் தடவில் செந்நெருப்பு ஆர;
ஆடல் மகளிர் பாடல்கொளப் புணர்மார்,
தண்மையின் திரிந்த இன்குரல் தீம் தொடை,

கொம்மை வருமுலை வெம்மையில் தடைஇ,
கருங் கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை நிறுப்ப;

காதலர்ப் பிரிந்தோர் புலம்ப, பெயல் கனைந்து
கூதிர் நின்றன்றால்.

### அரசியின் அரண்மனை மனை வகுத்த முறை

போதே, மாதிரம்
விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்
இரு கோல் குறிநிலை வழுக்காது குடக்கு ஏர்பு,
ஒரு திறம் சாரா அரைநாள் அமையத்து,

நூல் அறி புலவர் நுண்ணிதின் கயிறு இட்டு,
தேஎம் கொண்டு, தெய்வம் நோக்கி,
பெரும்பெயர் மன்னர்க்கு ஒப்ப மனைவகுத்து

### கோபுர வாயில்

ஒருங்கு உடன் வளைஇ ஓங்குநிலை வரைப்பின்
பரு இரும்பு பிணித்து, செவ்வரக்கு உரீஇ

துணைமாண் கதவம் பொருத்தி, இணை மாண்டு,
நாளொடு பெயரிய கோள் அமை விழு மரத்து,
போது அவிழ் குவளைப் புதுப்பிடி கால் அமைத்து,
தாழொடு குயின்ற, போர்அமை புணர்ப்பின்,
கைவல் கம்மியன் முடுக்கலின், புரைதீர்ந்து,

ஐயவி அப்பிய நெய்அணி நெடு நிலை,
வென்று எழு கொடியொடு வேழம் சென்று புக,
குன்று குயின்றன்ன ஓங்குநிலை வாயில்,

## முற்றமும் முன் வாயிலும்

திருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பின்
தரு மணல் ஞெமிரிய திருநகர் முற்றத்து,

நெடுமயிர் எகினத் தூநிற ஏற்றை,
குறுங்கால் அன்னமோடு உகளும் முன்கடை,

## அரண்மனையில் எழும் ஓசைகள்

பணைநிலை முனைஇய பல்உளைப் புரவி
புல் உணாத் தெவிட்டும் புலம்புவிடு குரலொடு,
நிலவுப் பயன் கொள்ளும் நெடுவெண் முற்றத்து,

கிம்புரிப் பகுவாய் அம்பணம் நிறைய,
கலிந்து வீழ் அருவிப் பாடுவிறந்து, அயல
ஒலிநெடும் பீலிஒல்க, மெல் இயல்
கலி மயில் அகவும் வயிர் மருள் இன்இசை,
நளி மலைச் சிலம்பின் சிலம்பும் கோயில்

## அந்தப்புரத்தின் அமைப்பு

யவனர் இயற்றிய வினை மாண் பாவை
கை ஏந்து ஐ அகல் நிறைய நெய் சொரிந்து,
பரூஉத்திரி கொளீஇப் குரூஉத்தலை நிமிர் எரி,
அறுஅறு காலை தோறு, அமைவரப் பண்ணி,
பல்வேறு பள்ளிதொறும் பாய்இருள் நீங்க;

பீடு கெழு சிறப்பின் பெருந்தகை அல்லது,
ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பின்
வரை கண்டன்ன தோன்றல, வரை சேர்பு.
வில் கிடந்தன்ன கொடிய, பல்வயின்,
வெள்ளி அன்ன விளங்கும் சுதை உரீஇ.

மணி கண்டன்ன மாத்திரள் திண்காழ்,
செம்பு இயன்றன்ன செய்வு உறு நெடுஞ்சுவர்,
உருவப் பல்பூ ஒரு கொடி வளைஇ,
கருவொடு பெயரிய காண்புஇன் நல்இல்

### அரசி படுத்திருக்கும் வட்டக் கட்டில்

தச நான்கு எய்திய பணைமருள் நோன்தாள்,
இகல் மீக்கூறும், ஏந்து எழில் வரிநுதல்,
பொருது ஒழி, நாகம் ஒழி எயிறு அருகு எறிந்து
சீரும் செம்மையும் ஒப்ப, வல்லோன்
கூர் உளிக் குயின்ற, ஈர்இலை இடை இடுபு,
தூங்கு இயல் மகளிர் வீங்குமுலை கடுப்ப

புடைதிரண்டிருந்த குடத்த, இடை திரண்டு,
உள்ளி நோன் முதல் பொருத்தி, அடி அமைத்து,
பேர் அளவு எய்திய பெரும் பெயர்ப் பாண்டில்

### கட்டிலின் மேல் அமைந்த படுக்கை

மடைமாண் நுண்இழை பொலிய, தொடைமாண்டு,
முத்துடைச் சாலேகம் நாற்றி, குத்துறுத்து,

புலிப் பொறிக் கொண்ட பூங்கேழ்த் தட்டத்துத்
தகடு கண் புதையக் கொளீஇ, துகள் தீர்ந்து,
ஊட்டுறு பல்மயிர் விரைஇ, வயமான்
வேட்டம் பொறித்து, வியன் கட் கானத்து
முல்லைப் பல்போது உறழப் பூ நிரைத்து,
மெல்லிதின் விரிந்த சேக்கை

## படுக்கையின் மேல் அரசி மலரணையில் வீற்றிருத்தல்

மேம்பட,
துணை புணர் அன்னத் தூ நிறத் தூவி
இணை அணை மேம்படப் பாய், அணை இட்டு,
காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத்
தோடு அமை தூமடி விரிந்த சேக்கை,

ஆரம் தாங்கிய அலர் முலை ஆகத்துப்
பின் அமை நெடுவீழ் தாழ, துணை துறந்து,
நல்நுதல் உலறிய சில்மெல் ஓதி,
நெடுநீர் வார்குழை களைந்தென, குறுங்கண்
வாயுறை அழுத்திய, வறிது வீழ் காதின்,

பொலந்தொடி தின்ற மயிர் வார் முன்கை,
வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து,
வாளைப்பகுவாய் கடுப்ப வணக்குறுத்து,
செவ்விரல் கொளீஇய செங்கேழ் விளக்கத்து,
பூந்துகில் மரீஇய ஏந்துகோட்டு அல்குல்,
அம்மாசு ஊர்ந்த அவிர்நூற் கலிங்கமொடு
புனையா ஓவியம் கடுப்ப, புனைவு இல்

## சேடியரும் செவிலியரும் தலைவியைத் தேற்றுதல்

தளிர் ஏர் மேனி, தாய சுணங்கின்,
அம் பணைத் தடைஇய மென் தோள், முகிழ் முலை,
வம்பு விசித்து யாத்த, வாங்கு சாய் நுகப்பின்,

மெல் இயல் மகளிர் நல் அடி வருட;
நரை விராவுற்ற நறுமென் கூந்தல்

செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇ,
குறியவும் நெடியவும் உரைபல பயிற்றி,
இன்னே வருகுவர் இன் துணையோர்' என
உகந்தவை மொழியவும் ஒல்லாள் மிகக் கலுழ்ந்து

**தலைவியின் வருத்த மிகுதி**

நுண் சேறு வழித்த நோன்நிலைத் திரள் கால்,
ஊறா வறு முலை கொளீஇய, கால் திருத்தி,
புதுவது இயன்ற மெழுகு செய் படமிசை,
திண் நிலை மருப்பின் ஆடு தலையாக,

விண் ஊர்பு இழிதரும் வீங்கு செலல் மண்டிலத்து
முரண் மிகு சிறப்பின் செல்வனொடு நிலைஇய,
உரோகிணி நினைவனள் நோக்கி, நெடிது உயிரா,
மா இதழ் ஏந்திய மலிந்து வீழ் அரிப்பனி,
செவ்விரல் கடைக்கண் சேர்த்தி, சில தெறியா,

புலம்பொடு வதியும் நலம்கிளிர் அரிவைக்கு
இன்னா அரும்படர் தீர, விறல் தந்து
இன்னே முடிக தில் அம்ம

**பாசறையில் அரசன் நிலை**

மின் அவிர்

ஓடையொடு பொலிந்த வினை நவில் யானை
நீள் திரள் தடக்கை நில மிசைப் புரள.

களிறு களம் படுத்த பெருஞ்செய் ஆடவர்,
ஒளிறு வாள் விழுப்புண் காணிய, புறம் போந்து,
வடந்தைத் தண் வளி எறிதொறும் நுடங்கி,

தெற்கு ஏர்பு இறைஞ்சிய தலைய, நன் பல
பாண்டில் விளக்கில், பரூஉச் சுடர் அழல,

வேம்பு தலை யாத்த நோன்காழ் எஃகமொடு,
முன்னோன் முறைமுறை காட்ட, பின்னர்,
மணி புறத்து இட்ட மாத்தாட் பிடியொடு,
பருமம் களையாப் பாய்பரிக் கலிமா
இருஞ் சேற்றுத் தெருவின் எறிதுளி விதிர்ப்ப,

புடைவீழ் அம்துகில் இடவயின் தழீஇ,
வாள் தோட் கோத்த வன்கண் காளை
சுவல் மிசை அமைத்த கையன், முகன் அமர்ந்து,
நூல் கால் யாத்த மாலை வெண்குடை
தவ்வென்று அசைஇ, தா துளி மறைப்ப,

நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்,
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே.

பாண்டியன் நெடுஞ்செழியனை மதுரைக்
கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது.

## நெடுநல்வாடை முற்றும்

### தனிப்பாடல்

வாடை நலிய, வடிக் கண்ணாள் தோள் நசைஇ,
ஓடை மழ களிற்றான் உள்ளான் கொல் – கோடல்
முகையோடு அலமர, முற்று எரிபோல் பொங்கி,
பகையோடு பாசறை உளான்.

**அருஞ்சொற்பொருள்**

| | | |
|---|---|---|
| வையகம் | - | உலகம் |
| புதுப்பெயர் | - | கார்காலத்து முதல்மழை |
| புலம்பு | - | தனிமை |
| கோடல் | - | காந்தள் |
| மா | - | விலங்குகள் |
| படலை | - | தழை |
| அறுவை | - | ஆடை |
| பெடை | - | பெண்புறா |
| வட்டம் | - | வட்டமான கற்பலகை |
| தென்வளி | - | தென்றல் |
| மாதிரம் | - | திசை |
| செவ்வரக்கு | - | சாதிலிங்கம் |
| ஐயவி | - | வெண்சிறுகடுகு |
| ஓங்குநிலை | - | கோபுரம் |
| பணை | - | பந்தி |
| கிம்புரி | - | மகரமீன் |
| அம்பணம் | - | குழாய் |
| நாகம் | - | யானை |
| பாண்டில் | - | வட்டக்கட்டில் |
| சாலேகம் | - | சாளரம் |
| வேட்டம் | - | வேட்டை |
| கடிகைநூல் | - | காப்புநாண் |
| விளக்கம் | - | முடக்கு என்னும் மோதிரம் |
| சுணங்கு | - | தேமல் |
| வம்பு | - | கச்சை |
| நுசுப்பு | - | இடை |
| நுண்சேறு | - | சாதிலிங்கக் குழம்பு |
| ஓடை | - | நெற்றிப்பட்டம் |
| வடந்தைத் தண்வளி | - | வாடைக்காற்று |
| பருமம் | - | சேணம் |
| சுவல் | - | தோள் |

# ஆ. குறுந்தொகை

சங்க காலத்தில் தோன்றிய தொகை நூல்களில் ஒன்றாகிய குறுந்தொகை நானூறு அகவற்பாவால் அமைந்த ஓர் அகப்பொருள் நூலாகும். இந்நூலின் பாடல்கள், நான்கடிச் சிற்றெல்லையையும் எட்டடிப் பேரெல்லையையும் உடையவை. 'நல்ல குறுந்தொகை' என்ற அடையுடன் இந்நூல் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

தொகை நூல்களில் முதலாவதாகத் தொகுக்கப்பெற்றதாக இந்நூல் கூறப்படுகின்றது. இந்நூலின் பாடல்கள் பல, பல உரையாசிரியர்களால் பல்வேறு உரை விளக்கங்களில் மேற்கோள்களாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. கடவுள் வாழ்த்து நீங்கலாக இந்நூலில் 401 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இத்தொகை நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ என்றும், பாடியோர் இருநூற்றைவர் என்றும் பழங்குறிப்பு காணப்படுகின்றது.

இந்நூலுக்குப் பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் உரை வகுத்திருந்தனர் எனத் தெரிய வருகிறது. ஆனால் அப்பழைய உரைகள் தற்போது கிடைக்கப்பெறவில்லை.

## 1. மருதம்

கழனி மாஅத்து விளைந்துஉகு தீம்பழம்
பழன வாளை கதூஉம் ஊரன்
எம்இல் பெருமொழி கூறி, தம் இல்,
கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல,
மேவன செய்யும், தன்புதல்வன் தாய்க்கே.

ஆலங்குடி வங்கனார் (பாடல் எண்.8)

கிழத்தி தன்னைப் புறனுரைத்தாள் எனக் கேட்ட காதற்பரத்தை அவட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

## 2. பாலை

உள்ளார் கொல்லோ – தோழி! கள்வர்
பொன்புனை பகழி செப்பம் கொண்மார்,
உகிர்நுதி புரட்டும் ஓசை போல,
செங்காற்பல்லி தன்துணை பயிரும்
அங்காற் கள்ளிஅம் காடு இறந்தோரே?

பாலை பாடிய பெருங்கடுங்கோ (பாடல் எண்.16)

பொருள்வயிற் பிரிந்தவிடத்துத் தலைமகள் ஆற்றாமைகண்டு, தோழி கூறியது.

## 3. குறிஞ்சி

யாரும் இல்லை; தானே கள்வன்
தான்அது பொய்ப்பின், யான்எவன் செய்கோ?
தினைந்தாள் அன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டு தான் மணந்த ஞான்றே.

– கபிலர் (பாடல் எண். 25)

வரைவு நீட்டித்த இடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

## 4. நெய்தல்

யார் அணங்குற்றனை – கடலே! பூழியர்
சிறுதலை வெள்ளைத் தோடு பரந்தன்ன
மீன்ஆர் குருகின் கானல் அம் பெருந்துறை,
வெள்வீத் தாழை திரைஅலை
நள்ளென் கங்குலும் கேட்கும், நின் குரலே!

– அம்மூவன் (பாடல் எண். 163)

தன்னுள் கையாறு எய்திடு கிளவி.

## 5. முல்லை

ஆர்கலி ஏற்றொடு கார்தலை மணந்த
கொல்லைப் புனத்த முல்லை மென்கொடி
எயிறுஎன முகையும் நாடற்குத்
துயில் துறந்தனவால் - தோழி! - எம்கண்ணே.

- ஒக்கூர் மாசாத்தி (பாடல் எண். 186)

பருவ வரவின்கண், ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

### அருஞ்சொற்பொருள்

| | | | |
|---|---|---|---|
| 1. | கதூஉம் | - | பற்றும் |
| | ஊரன் | - | மருத நிலத்துத் தலைமகன் |
| | தீம்பழம் | - | இனிய பழம் |
| | ஆடி | - | கண்ணாடி |
| 2. | உள்ளுதல் | - | நினைத்தல் |
| | பகழி | - | அம்பு |
| | உகிர் | - | நகம் |
| 3. | ஆரல் | - | ஆரல்மீன் |
| | குருகு | - | நாரை வகை |
| 4. | அணங்குற்றனை | - | வருத்தமுற்றனை |
| | பூழியர் | - | பூழி நாட்டார் |
| | தோடு | - | தொழுதி |
| | கானல் | - | கடற்கரைச்சோலை |
| 5. | ஆர்கலி | - | மிக்கஓசை |
| | ஏறு | - | இடியேறு |
| | முகையும் | - | அரும்பும் |
| | தலைமணந்த | - | கலந்த |

# இ. அகநானூறு

ஐந்திணைகளைப் பற்றிய 400 பாடல்களைக் கொண்டுள்ளது. இந்நூலின் பாக்கள் 13 அடி முதல் 31 அடி வரை கொண்டுள்ளன. 158 புலவர்கள் இந்நூலைப் பாடியுள்ளார்கள். சங்ககால மன்னர்களின் வரலாற்றையும், மக்களின் வாழ்க்கையையும் இவற்றில் காணலாம். நெடுந்தொகை, பெருந்தொகை நானூறு, அகம், அகப்பட்டு என்பன அகநானூற்றின் வேறு பெயர்களாகும். நூலின் பெயரில் ‘அகம்’ எனப்பட்டது இந்நூல் மட்டுமே.

இந்நூலைத் தொகுப்பித்தோன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி. தொகுத்தவர் மதுரை உப்பூரிக்குடிக்கிழார் மகனார் உருத்திரசன்மனார். இந்நானூறு பாடல்களில் 1-120 பாடல்களை களிற்றுயானைநிரை எனவும், 121-300 பாடல்களை மணிமிடைபவளம் எனவும், 301-400 பாடல்களை நித்திலக்கோவை எனவும் பகுத்துள்ளனர். பழந்தமிழரின் திருமணமுறையை 86, 136 பாடல்கள் விரிவாகச் சுட்டுகின்றன.

ஒன்று மூன்று ஐந்து ஏழ்ஒன் பான்பாலை; ஓதாது
நின்றவற்றில் நான்கு நெறிமுல்லை; அன்றியே
ஆறாம் மருதம்; அணிநெய்தல் ஐயிரண்டு
கூறாதவை குறிஞ்சிக் கூற்று.

என்று பழைய வெண்பா அகநானூற்றை பகுத்து வைப்பு முறை செய்துள்ளது.

### 1. பாலை

நாம்நகை உடையம் நெஞ்சே! - கடுந்தெறல்
வேனில் நீடிய வான்உயர் வழிநாள்,
வறுமை கூரிய மண்நீர்ச் சிறுகுளத்
தொடுகுழி மருங்கில் துவ்வாக் கலங்கல்
கன்றுடை மடப்பிடிக் கயந்தலை மண்ணி,
சேறு கொண்டு ஆடிய வேறுபடு வயக்களிறு
செங்கோல் வால் இணர் தயங்கத் தீண்டி,

சொரிபுறம் உரிஞிய நெறிஅயல் மராஅத்து
அல்குறு வரிநிழல் அசைஇ, நம்மொடு
தான்வரும் என்ப, தடமென் தோளி–
உறுகண் மழவர் உருள்கீண்டிட்ட
ஆறுசெல் மாக்கள் சோறுபொதி வெண்குடை
கணைவிசைக் கடுவளி எடுத்தலின், துணை செத்து
வெருள்ஏறு பயிரும் ஆங்கண்,
கருமுக முசுவின் கானத் தானே.

– மதுரை மருதன் இளநாகன் (பாடல் எண். 121)

*கூற்று:* தோழியால் தலைமகள் உடன்வரும் எனக் கேட்ட தலைமகன் நெஞ்சிற்குச் சொல்லியது.

## உ. குறிஞ்சி

இரும்பிழி மகாஅர்இவ் அழுங்கல் மூதூர்
விழவு இன்று ஆயினும் துஞ்சாது ஆகும்;
மல்லல் ஆவண மறுகு உடன் மடியின்,
வல்உரைக் கடுஞ்சொல் அன்னை துஞ்சாள்;
பிணிகோள் அருஞ்சிறை அன்னை துஞ்சின்,
துஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவர்;
இலங்குவேல் இளையர் துஞ்சின், வைஎயிற்று
வலம்சுரித் தோகை ஞாளி மகிழும்;
அரவாய் ஞமலி மகிழாது மடியின்,
பகல்உரு உறழ நிலவுக்கான்று விசும்பின்
அகல்வாய் மண்டிலம் நின்று விரியும்மே;
திங்கள் கல்சேர்பு கனை இருள் மடியின்'
இல்எலி வல்சி வல்வாய்க் கூகை
கழுது வழங்கு யாமத்து அழிதகக் குழறும்;
வளைக்கண் சேவல் வாளாது மடியின்,
மனைச் செறி கோழி மாண்குரல் இயம்பும்;
எல்லாம் மடிந்த காலை, ஒருநாள்

நில்லா நெஞ்சத்து அவர் வாரலரே; அதனால்,
அரிபெய் புட்டில் ஆர்ப்பப் பரிசிறந்து,
ஆதி போகிய பாய்பரி நன்மா
நொச்சி வேலித் தித்தன் உறந்தைக்
கல்முதிர் புறங்காட்டு அன்ன
பல்முட் டின்றால் தோழி! நம்களவே.

– பரணர். (பாடல் எண். 122)

*கூற்று:* தலைமகன் சிறைப்புறத்தானாக, தோழிக்குச் சொல்லுவாளாய், தலைமகள் சொற்றது; தோழி சொல் எடுப்ப, தலைமகள் சொல்லியதூஉம் ஆம்.

## 3. பாலை

உண்ணா மையின் உயங்கிய மருங்கின்
ஆடாப் படிவத்து ஆன்றோர் போல,
வரைசெறி சிறுநெறி நிரைபுடன் செல்லும்
கான யானை கவின்அழி குன்றம்
இறந்து, பொருள், தருதலும் ஆற்றாய்; சிறந்த
சில்ஐங் கூந்தல் நல்அகம் பொருந்தி
ஒழியின், வறுமை அஞ்சுதி; அழிதகவு
உடைமதி – வாழிய, நெஞ்சே! – நிலவுஎன
நெய்கனி நெடுவேல் எஃகின் இமைக்கும்
மழைமருள் பல்தோல் மாவண் சோழர்
கழைமாய் காவிரிக் கடல்மண்டு பெருந்துறை
இறவொடு வந்து கோதையொடு பெயரும்
பெருங்கடல் ஓதம் போல,
ஒன்றில் கொள்ளாய், சென்றுதரு பொருட்கே.

– காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார். (பாடல் எண். 123)

*கூற்று:* தலைமகன் இடைச்சுரத்துத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

**அருஞ்சொற்பொருள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | அல்குதல் | - | சுருங்குதல் |
| | உறுகண் | - | துன்பம் |
| | மண்ணீர் | - | குளிக்கும் நீர் |
| | செத்து | - | கருதி |
| | வெருவுதல் | - | அஞ்சுதல் |
| | முசு | - | குரங்கு |
| | கய | - | மென்மை |
| | தட | - | பெருமை |
| | மராஅ | - | வெண்கடம்பமரம் |
| 2. | அழுங்கல் | - | ஆரவாரம் |
| | விழவு | - | விழா |
| | மறுகு | - | தெரு |
| | ஞமலி | - | நாய் |
| | வல்சி | - | உணவு |
| | கூகை | - | கோட்டான் |
| | வளை | - | பொந்து |
| | மடிதல் | - | தங்குதல் |
| 3. | உயங்கிய | - | வருந்திய |
| | ஆடாப்படிவம் | - | நீராடாத நோன்பு |
| | மழை | - | மேகம் |
| | தோல் | - | கிடுகு |
| | கழை | - | மூங்கில் |
| | இறவு | - | இறாமீன் |
| | ஓதம் | - | வெள்ளம் |

# ஈ. புறநானூறு

எட்டுத்தொகை நூல்களுள் புறப்பொருள் குறித்த முழுநூல் புறநானூறு ஆகும். தமிழகமெங்கணும் இருந்த பெருவேந்தர், குறுநிலமன்னர், ஈகையஞ்செல்வர், சால்பமைந்த பெரியோர், புலவர் எனப் பலரையும் குறிப்பதாக அமைந்துள்ளது புறநானூறு. பண்டைத் தமிழகத்தின் அரிய வரலாற்றுத் தொகுப்பு இது.

4 அடி முதல் 40 அடிகள் வரை உள்ள 400 பாடல்கள் கொண்ட இந்நூலைச் சுமார் 157 புலவர்கள் பாடியுள்ளனர். புறம், புறப்பாட்டு என்பன இதன் வேறு பெயர்களாகும். ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் திணை, துறை, பாடியோர், பாடப்பட்டோர் முதலான குறிப்புகள் உள்ளன. இதில் இடம்பெற்றுள்ள கடவுள் வாழ்த்தினை பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியுள்ளார்.

புறநானூற்றில் புரவலர்கள் புலவர்களைப் போற்றி அவர்களின் அறிவுரைகளைச் செவிமடுத்து ஒழுகிய சிறப்புகளையும், மன்னர்கள் அறமுறை பிறழாது போர்புரிந்த தன்மையையும், போர்க்களத்தில் இறந்து போன தன் மகனின் உடலைக் கண்டு பெருமிதம் எய்திய தாயின் மறக்குணத்தையும் காணமுடிகின்றது.

**1**

வள்ளியோர்ப் படர்ந்து, புள்ளின் போகி,
'நெடிய' என்னாது சுரம் பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடி,
பெற்றது மகிழ்ந்து, சுற்றம் அருத்தி,
ஓம்பாது உண்டு, கூம்பாது வீசி,
வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீது அறிந்தன்றோ? இன்றே; திறப்பட
நண்ணார் நாண, அண்ணாந்து ஏகி,
ஆங்க இனிது ஒழுகின் அல்லது, ஓங்கு புகழ்
மண் ஆள் செல்வம் எய்திய
நும் ஓர் அன்ன செம்மலும் உடைத்தே.

- (பாடல் எண். 47)

திணை: வஞ்சி, துறை: வஞ்சி

சோழன் நெடுங்கிள்ளியை கோவூர்கிழார் பாடியது.

**2**

மாசு அற விசித்த வார்புறு வள்பின்
மை படு மருங்குல் பொலிய, மஞ்ஞை
ஒலி நெடும் பீலி ஒண் பொறி மணித் தார்,
பொலங் குழை உழிஞையொடு, பொலியச் சூட்டி,
குருதி வேட்கை உரு கெழு முரசம்
மண்ணி வாரா அளவை, எண்ணெய்
நுரை முகந்தன்ன மென் பூஞ் சேக்கை
அறியாது ஏறிய என்னைத் தெறுவர,
இரு பாற்படுக்கும் நின் வாள் வாய் ஒழித்ததை
அதூஉம் சாலும், நல் தமிழ் முழுது அறிதல்;
அதனொடும் அமையாது, அணுக வந்து, நின்
மதனுடை முழவுத்தோள் ஓச்சி, தண்ணென
வீசியோயே; வியலிடம் கமழ,
இவண் இசை உடையோர்க்கு அல்லது, அவணது
உயர் நிலை உலகத்து உறையுள் இன்மை
விளங்கக் கேட்ட மாறுகொல் –
வலம் படு குருசில்! நீ ஈங்கு இது செயலே?

– (பாடல் எண். 50)

திணை: வாகை, துறை: இயன்மொழி.

சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல்இரும்பொறையை மோசிகீரனார் பாடியது.

**3**

மெல்ல வந்து, என் நல் அடி பொருந்தி,
'ஈ' என இரக்குவர் ஆயின், சீருடை
முரசு கெழு தாயத்து அரசோ தஞ்சம்;
இன் உயிர் ஆயினும் கொடுக்குவென், இந் நிலத்து;
ஆற்றல் உடையோர் ஆற்றல் போற்றாது, என்
உள்ளம் எள்ளிய மடவோன், தெள்ளிதின்

துஞ்சு புலி இடறிய சிதடன் போல,
உய்ந்தனன் பெயர்தலோ அரிதே; மைந்துடைக்
கழை தின் யானைக் கால் அகப்பட்ட
வன் திணி நீள் முளை போல, சென்று அவண்
வருந்தப் பொரேஎன் ஆயின், பொருந்திய
தீது இல் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல் இருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைக, என் தாரே!

- (பாடல் எண். 73)

திணை: காஞ்சி, துறை: வஞ்சினக் காஞ்சி.
சோழன் நலங்கிள்ளி பாட்டு.

**4**

சாறு தலைக்கொண்டென, பெண் ஈற்று உற்றென,
பட்ட மாரி ஞான்ற ஞாயிற்று,
கட்டில் நிணக்கும் இழிசினன் கையது
போழ் தூண்டு ஊசியின் விரைந்தன்றுமாதோ -
ஊர் கொள வந்த பொருநனொடு
ஆர்புனை தெரியல் நெடுந்தகை போரே!

- (பாடல் எண். 82)

திணை: வாகை, துறை: அரசவாகை
பெருநற்கிள்ளியை சாத்தந்தையார் பாடியது.

**5**

என்னைக்கு ஊர் இஃது அன்மையானும்,
என்னைக்கு நாடு இஃது அன்மையானும்
'ஆடு ஆடு' என்ப, ஒரு சாரோரே;
'ஆடு அன்று' என்ப, ஒரு சாரோரே;
நல்ல, பல்லோர் இரு நன் மொழியே;

அம் சிலம்பு ஒலிப்ப ஓடி எம் இல்,
முழா அரைப் போந்தை பொருந்தி நின்று,
யான் கண்டனன், அவன் ஆடு ஆகுதலே.

- (பாடல் எண். 85)

திணை: கைக்கிளை; துறை: பழிச்சுதல்

பெருநற்கிள்ளியை விரும்பிய நக்கண்ணையார் கைக்கிளையாய்ப் புகழ்ந்து பாடியது.

**அருஞ்சொற்பொருள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | வள்ளியோர் | - | கொடையாளர் |
| | சுரம் | - | கடத்தற்கரிய பாலைவழி |
| | செம்மல் | - | தலைமை |
| 2. | மஞ்ஞை | - | மயில் |
| | ஒலி | - | தழைத்த |
| | உரு | - | அச்சம் |
| | மண்ணுதல் | - | நீராட்டுதல் |
| | மதன் | - | வலிமை |
| 3. | தஞ்சம் | - | எளிமை |
| | சிதடன் | - | பார்வையற்றோன் |
| | மைந்து | - | வலிமை |
| | ஒல்லா | - | பொருந்தாத |
| | தார் | - | மாலை |
| 4. | சாறு | - | விழா |
| | ஞான்ற | - | மறைந்த |
| | நிணக்கும் | - | பிணிக்கும் |
| | போழ் | - | பிளவு |
| | தெரியல் | - | மாலை |
| 5. | அளை | - | முழை, குகை |
| | யாண்டு | - | எவ்விடம் |

# உ. பதிற்றுப்பத்து

எட்டுத்தொகை நூல்களின் வரிசையில் நான்காவதாக அமைந்த நூல் பதிற்றுப்பத்து ஆகும். இந்நூல் பத்துச் சேர மன்னர்களைக் குறித்து ஒவ்வொரு மன்னருக்கும் பத்துப் பாடல்களாகப் பத்துப் புலவர் பெருமக்களால் பாடப்பெற்ற நூறு செய்யுட்கள் அடங்கிய நூலாதலின் பதிற்றுப்பத்து என்னும் பெயர் பெற்றது. இவற்றுள் முதல்பத்தும் இறுதிப்பத்தும் கிடைக்கவில்லை. தமிழுலகுக்குக் கிடைத்திருப்பவை இரண்டாம்பத்து முதல் ஒன்பதாம் பத்து முடியவுள்ள எட்டுப்பத்துக்களே.

இந்நூல் புறப்பொருள் பற்றிய நூலாகும். சேரமன்னர்களின் வரலாற்றுச் செய்தியைக் காலவொழுங்கின்படி விரித்துப் பேசும் நூல் பதிற்றுப்பத்தாகும். ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் துறை, வண்ணம், தூக்கு, பெயர் என்பனவற்றைப் புலப்படுத்தும் குறிப்புக்கள் உள்ளன. அவ்வப்பாடலின் சிறந்ததொரு தொடரே பாட்டின் பெயராக அமைந்துள்ளது. ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் அப்பத்தினைப் பாடினோர் அதன் பாட்டுடைத் தலைவர், அவர் செய்த அரும் பெரும் செயல்கள், பாடிய புலவருக்கு அவர் அளித்த பரிசில் முதலிய செய்திகளைக் குறிப்பிடும் பதிகம் உள்ளது.

கடல்பிறக்கோட்டிய குட்டுவனைப் பரணர் பாடும் பாடலே ஐந்தாம் பத்தாக அமைந்துள்ளது. இப்பாடலைப் பாடியதற்காக உம்பற்காட்டு வருவாயையும், தன்மகன் குட்டுவன் சேரலையும் பரணருக்குப் பரிசிலாக அளித்தான் எனப் பதிகம் கூறுகிறது. ஐந்தாம்பத்தில் அமைந்துள்ள மூன்று பாடல்கள் இங்கு பாடமாக அமைந்துள்ளன.

## 1. கரைவாய்ப் பருதி

இழையர், குழையர், நறுந் தண் மாலையர்,
சுடர் நிமிர் அவிர் தொடி செறித்த முன்கை,
திறல் விடு திருமணி இலங்கு மார்பின்,
வண்டு படு கூந்தல் முடி புனை மகளிர்
தொடை படு பேரியாழ் பாலை பண்ணி,
பணியா மரபின் உழிஞை பாட,
இனிது புறந்தந்து, அவர்க்கு இன் மகிழ் சுரத்தலின்–
சுரம் பல கடவும் கரை வாய்ப் பருதி
ஊர் பாட்டு எண் இல் பைந் தலை துமிய,
பல் செருக் கடந்த கொல் களிற்று யானை,
கோடு நரல் பௌவம் கலங்க வேல் இட்டு
உடை திரைப் பரப்பின் படு கடல் ஓட்டிய
வெல் புகழ்க் குட்டுவற் கண்டோர்–
செல்குவம் என்னார், பாடுபு பெயர்ந்தே.

துறை: செந்துறைப் பாடாண் பாட்டு

வண்ணம்: ஒழுகு வண்ணம், தூக்கு: செந்தூக்கு

## 2. நல்நுதல் விறலியர்

அட்டு ஆனானே, குட்டுவன்; அடுதொறும்,
பெற்று ஆனாரே, பரிசிலர் களிறே;
வரை மிசை இழிதரும் அருவியின், மாடத்து
வளி முனை அவிர்வரும் கொடி நுடங்கு தெருவில்,
சொரி கரை கவரும் நெய் வழிபு உராலின்,
பாண்டில் விளக்குப் பரூஉச் சுடர் அழல,
நல் நுதல் விறலியர் ஆடும்
தொல் நகர் வரைப்பின் அவன் உரை ஆனாவே.

துறை: செந்துறைப் பாடாண் பாட்டு

வண்ணம்: ஒழுகு வண்ணம், தூக்கு: செந்தூக்கு

## 3. பேர் எழில் வாழ்க்கை

பைம் பொற் தாமரை பாணர்ச் சூட்டி,
ஒள் நுதல் விறலியர்க்கு ஆரம் பூட்டி,
கெடல் அரும் பல் புகழ் நிலைஇ, நீர் புக்கு,
கடலொடு உழந்த பனித் துறைப் பரதவ!
'ஆண்டு நீர்ப் பெற்ற தாரம், ஈண்டு, இவர்
கொள்ளாப் பாடற்கு எளிதினின் ஈயும்
கல்லா வாய்மையன் இவன்' எனத் தத்தம்
கை வல் இளையர் நேர் கை நிரப்ப,
வணங்கிய சாயல் வணங்கா ஆண்மை,
முனை சுடு கனை எரி எரித்தலின், பெரிதும்
இதழ் கவின் அழிந்த மாலையொடு, சாந்து புலர்
பல் பொறி மார்ப! நின் பெயர் வாழியரோ–
நின் மலைப் பிறந்து, நின் கடல் மண்டும்
மலி புனல் நிகழ்தரும் தீம் நீர்விழவின்,
பொழில் வதி வேனில் பேர் எழில் வாழ்க்கை,
மேவரு சுற்றமொடு உண்டு, இனிது நுகரும்,
தீம் புனல், ஆயம் ஆடும்,
காஞ்சிஅம் பெருந் துறை மணலினும் பலவே!

துறை: இயல்மொழி வாழ்த்து வண்ணம்: ஒழுகு வண்ணம்
தூக்கு: செந்தூக்கு பெயர்: பேர் எழில் வாழ்க்கை

### அருஞ்சொற்பொருள்

1. சுடர் – ஒளி
   நிமிர்தல் – மிகுதல்
   தொடி – வளையல்
   திறல் – வெற்றி
   அவிர்தல் – விளங்குதல்

| | | | |
|---|---|---|---|
| | மணி | - | மணிகள் இழைத்த மாலை |
| | தொடை | - | நரம்பின் கட்டு |
| | சுரம் | - | அரிய வழி |
| | கரைவாய் | - | கரையாகிய வாய் |
| | பருதி | - | வட்டம் |
| | கோடு | - | சங்கு |
| | பௌவம் | - | கடல் |
| | படுதல் | - | ஒலித்தல் |
| 2. | அட்டு | - | கொன்று |
| | களிறு | - | ஆண்யானை |
| | இழிதரும் | - | இறங்கும் |
| | நுடங்கு | - | அசைகின்ற |
| | சுரை | - | திரிக்குழாய் |
| | கவரும் | - | உறிஞ்சும் |
| | உராஅன் | - | பரவுதலால் |
| | பாண்டில் விளக்கு | - | காலினையுடைய விளக்கு |
| | பரூஉ | - | பருத்த |
| | ஆனா | - | அடங்கா |
| 3. | ஆண்மை | - | வீரம் |
| | மண்டும் | - | சென்றடையும் |
| | மலிபுனல் | - | மிக்க நீரையுடைய ஆறு |
| | பொழில் | - | சோலை |
| | வேனில் | - | வேனிற் பருவம் |
| | வதிதல் | - | தங்குதல் |

- - -

# அலகு - 2

# பதினெண் கீழ்க்கணக்கு

## அ. திருக்குறள்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் முதன்மையானதும், காலத்தால் முற்பட்டதும் திருக்குறளாகும். அனைத்து சமயத்தவரும் நாட்டினரும் ஏற்றுக் கொள்ளும் உயரிய வாழ்வியல் உண்மைகளை இந்நூல் கூறுகின்றது. இதன் ஆசிரியர் திருவள்ளுவர். புலவர்கள் அனைவரும் ஆண்டு கொண்டிருக்கின்ற அரசனையும், ஆண்டவனையும் பாடிக்கொண்டிருந்த காலத்தில் மக்களைப் பற்றிப் பாடுதல் வேண்டும் என்று சிந்தித்த ஒரே புலவர் திருவள்ளுவரே.

நாடு, மொழி, இனம், எல்லை, காலம், கடவுள், மதம், சாதி அனைத்தையும் கடந்த நூல் திருக்குறள் ஒன்றுதான். இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டு விளங்குகின்றது. அறத்துப்பாலில் முப்பத்தெட்டு அதிகாரங்களும், பொருட்பாலில் எழுபது அதிகாரங்களும், காமத்துப்பாலில் இருபத்தைந்து அதிகாரங்களும் அமைந்துள்ளன. இந்நூலின் வேறு பெயர்கள் திருவள்ளுவம், தமிழ்மறை, பொதுமறை, முப்பால் நூல், பொய்யாமொழி, தெய்வநூல், வாயுரை வாழ்த்து, உத்தரவேதம். திருக்குறளுக்கு உரை செய்தவர்கள் பதின்மர் ஆவர். உலகத்தில் அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல் திருக்குறள்.

அறத்துப்பாலில் அமைந்துள்ள வான்சிறப்பு, காமத்துப்பாலில் அமைந்துள்ள காதல் சிறப்புரைத்தல் என்ற இரண்டு அதிகாரமும் இங்கு பாடமாக வைக்கப்பட்டுள்ளன.

## 1. வான் சிறப்பு

வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று. 1

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை. 2

விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி. 3

ஏரின் உழாஅர் உழவர்; புயல்என்னும்
வாரி வளம்குன்றிக் கால். 4

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. 5

விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது. 6

நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும்; தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின். 7

சிறப்பொடு பூசனை செல்லாது; வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு. 8

தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்;
வானம் வழங்காது எனின். 9

நீர்இன்று அமையாது உலகெனின், யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு. 10

## 2. காதல் சிறப்புரைத்தல்

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர். 1

உடம்பொடு உயிரிடை என்னமற்று அன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு. 2

கருமணியில் பாவாய்நீ போதாயாம் வீழும்
திருநுதற்கு இல்லை இடம். 3

வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை; சாதல்
அதற்கன்னள் நீங்கும் இடத்து. 4

உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம். 5

கண்ணுள்ளின் போகார்; இமைப்பின் பருவரார்;
நுண்ணியரெம் காத லவர். 6

கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக்கு அறிந்து. 7

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து. 8

இமைப்பின் கரப்பாக்கு அறிவல்; அனைத்திற்கே
ஏதிலர் என்னுமிவ் வூர். 9

உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்
ஏதிலர் என்னமிவ் வூர். 10

## அருஞ்சொற்பொருள்

விரிநீர் - கடல்
உண் - உணவு
உடற்றும் - அழித்தல்
விசும்பு - வான்
பூசனை - ஆராதனை
எயிறு - பல்
நுதல் - நெற்றி
உள்ளுதல் - நினைத்தல்
பருவரார் - வருந்தமாட்டார்
ஏதிலர் - அன்பற்றவர்.

# ஆ. நாலடியார்

நான்கடி கொண்ட வெண்பாக்களால் ஆனதால் நாலடி என்றும், சிறப்பு கருதி ஆர் விகுதி சேர்த்து நாலடியார் எனவும் இந்நூல் வழங்கப்படுகிறது. 400 வெண்பாக்களைக் கொண்டுள்ளதால் 'நாலடி நானூறு' என்ற வேறு பெயரையும் பெற்றுள்ளது.

திருக்குறளுக்கு அடுத்த பெருமை வாய்ந்த நூலாக விளங்கும் இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பிரிவுகளையும், 40 அதிகாரங்களையும் கொண்டுள்ளது. பதுமனார் என்னும் புலவர் திருக்குறளைப் பின்பற்றி திருக்குறளைப் போன்ற அமைப்பினில் இதனை வகைப்படுத்தியுள்ளார். அறத்துப்பால் நூற்று முப்பது வெண்பாக்களையும், பதின்மூன்று அதிகாரங்களையும், பொருட்பால், மொத்தம் இருப்பத்தாறு அதிகாரங்களையும் இருநூற்று அறுபது வெண்பாக்களையும் கொண்டுள்ளது. காமத்துப்பால் ஒரே ஓர் அதிகாரம் பத்து வெண்பாக்கள் கொண்டதாக அமைந்துள்ளது.

வேளான் வேதம் என்று சிறப்பிக்கப்படும் இந்நூலின் பெருமையினை "ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" 'பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்' என்ற பழமொழிகளால் அறியலாம்.

பொருட்பாலில் நட்பாராய்தல் அதிகாரம் பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

## பொருட்பால்

### நட்பாராய்தல்

1. கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மையெஞ் ஞான்றுங்
குருத்திற் கரும்புதின் றற்றே ; - குருத்திற்
கெதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ, என்றும்
மதுர மிலாளர் தொடர்பு.

2. இற்பிறப் பெண்ணி இடைதிரியா ரென்பதோர்
நற்புடை கொண்டமை யல்லது; - பொற்கேழ்
புனலொழுகப் புள்ளிரியும் பூங்குன்ற நாட!
மனமறியப் பட்டதொன் றன்று.

3. யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்; யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும், எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்.

4. பலநாளும் பக்கத்தா ராயினும் நெஞ்சில்
சிலநாளும் ஒட்டாரோ டொட்டார்; – பலநாளும்
நீத்தா ரெனக்கை விடலுண்டோ, தந்நெஞ்சத்
தியாத்தாரோ டியாத்த தொடர்பு.

5. கோட்டுப்பூப் போல மலர்ந்துபிற் கூம்பாது
வேட்டதே வேட்டதாம் நட்பாட்சி; –தோட்ட
கயப்பூப்போல் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
நயப்பாரும் நட்பாரும் இல்.

6. கடையாயார் நட்பிற் கமுகனையர்; ஏனை
இடையாயார் தெங்கி னனையர்; தலையாயார்
எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே,
தொன்மை யுடையார் தொடர்பு.

7. கழுநீருட் காரட கேனும் ஒருவன்
விழுமிதாக் கொள்ளின் அமிழ்தாம்; – விழுமிய
குய்த்துவையார் வெண்சோறே யாயினும் மேவாதார்
கைத்துண்டல் காஞ்சிரங் காய்.

8. நாய்க்காற் சிறுவிரல்போல் நன்கணிய ராயினும்
ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னாம்?
சேய்த்தானுஞ் சென்று கொளல் வேண்டும், செய்விளைக்கும்
வாய்க்கா லனையார் தொடர்பு.

9. தெளிவிலார் நட்பின் பகை நன்று; சாதல்
விளியா அருநோயின் நன்றால் – அளிய
இகழ்தலின் கோறல் இனிதேமற் றில்ல
புகழ்தலின் வைதலே நன்று.

10. மரீஇப் பலரோடு பன்னாள் முயங்கிப்
பொரீஇப் பொருட்டக்கார்க் கோடலே வேண்டும்
பரீஇ உயிர்செருக்கும் பாம்பொடும் இன்னா
மரீஇஇப் பின்னைப் பிரிவு.

**அருஞ்சொற்பொருள்**

1. எஞ்ஞான்றும் – எப்போதும்
மதுரம் இலாளர் தொடர்பு – இனிப்பில்லாதவர்களோடு கொண்ட நட்பு

2. பொன்கேழ் – பொன்னிறமுள்ள
புள் இரியும் – பறவைகள் ஓடுகின்ற

3. ஒரீஇ – விட்டு
வால்குழைக்கும் – வாலையாட்டும்

4. ஒட்டார் – சேரமாட்டார்கள்
யாத்தாரோடு – சேர்க்கப்பட்டவர்களோடு

5. கோட்டுப்பூ – கொம்பிலிருக்கிற பூ
கயப்பூ – குளத்திலிருக்கும் பூ

6. கடைஆயார் – கீழ்த்தரமானவர்கள்
பெண்ணை – பனை மரம்

7. விழுமிய – சிறந்த
மேவாதார் – நேசியாதவர்

8. உதவாதார் நட்பு – உதவி செய்யாதவர்களுடைய நட்பு

9. விளியா – தீராத
கோறல் – கொல்லுதல்

10. மரீஇ – சேர்ந்து,
பரீஇ – கடித்து

# இ. பழமொழி

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் திருக்குறள், நாலடியார் ஆகிய நூல்களை அடுத்துப் பெரிதும் பாராட்டப்படுவது பழமொழி. ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் ஒரு பழமொழி வர பாடப்பட்டுள்ளதால் பழமொழி என்ற பெயரினைப் பெற்றது. இவற்றில் நானூறு வெண்பாக்கள் இடம்பெற்றுள்ளன. ஆதலால் இதற்கு பழமொழி நானூறு என்ற வேறொரு பெயரும் உண்டு. இந்நூலின் ஆசிரியர் முன்றுறை அரையனார். அரையர் என்பது அரசனைக் குறிக்கும். இவர் ஒரு குறுநில மன்னராக இருந்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு வெண்பாவும் நீதியையும் நல்ல ஒழுக்கத்தையும் விளக்கியுள்ளது. கல்வி, ஒழுக்கம், ஊழ், நட்பு, அரசியல், இல்வாழ்வு, வீடுபேறு ஆகிய அனைத்தையும் வகுத்துக் கூறும் நன்னூலாகும். இவற்றில் காணப்படும் பழமொழி இலக்கியப் பழமொழியாக இலங்குகிறது. பண்டைத்தமிழர் பண்பாட்டைக் காட்டும் கண்ணாடியாக விளங்குகிறது.

## பழமொழி

### சான்றோர் செய்கை

ஈட்டிய ஒண்பொருள் இன்றெனினும் ஒப்புர
வாற்றும் மனைப்பிறந்த சான்றவன் – ஆற்றவும்
போற்றப் படாதாகிப் புல்லின்றி மேயினும்
ஏற்றுக்கன் றேறாய் விடும்.

அடர்ந்து வறியராய் ஆற்றாத போழ்தும்
இடங்கண் டறிவாமென் றெண்ணி யிராஅர்
மடங்கொண்ட சாயல் மயிலன்னாய்! சான்றோர்
கடங்கொண்டும் செய்வார் கடன்.

மொய்க்கொண் டெழுந்த அமரகத்து மாற்றார்வாய்ப்
பொய்கொண் டறைபோய்த் திரிபவர்க் கென்கொலோ?
மையுண் டமர்ந்தகண் மாணிழாய்! சான்றவர்
கையுண்டும் கூறுவர் மெய்.

ஆண்டீண் டெனவொன்றோ வேண்டா அடைந்தாரை
மாண்டிலா ரென்றே மறைப்பக் கிடந்ததோ?
பூண்டாங் கிளமுலைப் பொற்றொடி! பூண்ட
பறையறையா ராயினா ரில்

பரியப் படுபவர் பண்பிலா ரேனும்
திரியப் பெறுபவோ சான்றோர் – விரிதிரைப்
பாரெறியும் முந்நீர்த் துறைவ! கடனன்றோ
ஊரறிய நட்டார்க் குணா?

**அருஞ்சொற்பொருள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஏற்றுக்கன்று | – | நல்ல எருதிற்குப் பிறந்த கன்று |
| | புல் இன்றி | – | தின்னும் புல் இன்றி |
| 2. | சாயல் | – | அழகு |
| | கடன் செய்வார் | – | தாம் செய்யக் கடவனவற்றைச் செய்வர் |
| 3. | சான்றவர் | – | பெரியோர் |
| | கைஉண்டும் | – | பிறருடைய கைப்பொருளை உண்டாராயினும் |
| 4. | மாண்டிலார் | – | மாட்சிமையுடையார் |
| 5. | முந்நீர் | – | கடல் |
| | உணா | – | உணவு |

# ஈ. திரிகடுகம்

இது மருந்தின் பெயர். திரிகடுகம் = திரி + கடுகம். திரி என்பதற்கு மூன்று என்று பொருள். கடுகம் என்பதற்கு காரமுள்ளவை என்று பொருள். சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்று பொருள்களும் திரிகடுகம் என்று வழங்கப்படும். இந்த மூன்று பொருள்களும் உடல் நோயைப் போக்கும் தன்மையைப் பெற்றிருப்பதுபோல இந்த நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் கூறப்படும் மூன்று கருத்துக்களும் உளநோயைப் போக்கி வாழ்க்கையை நல்வழிப்படுத்துவன. இந்நூலில் நூறு வெண்பாக்கள் இடம்பெற்றுள்ளன. திருமாலைப் பற்றிய பாடல் கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ளது. இதன் ஆசிரியர் நல்லாதனார். இவர் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர் என்பர்.

## திரிகடுகம்

1. அருந்ததிக் கற்பினார் தோளும் திருந்திய
தொல்குடியின் மாண்டார் தொடர்ச்சியும் – சொல்லின்
அரில் அகற்றுங் கேள்வியார் நட்புமிம் மூன்றும்
திரிகடுகம் போலு மருந்து.

2. உண்பொழுது நீராடி யுண்டலும் என்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலுந் – தோல்வற்றிச்
சாயினுஞ் சான்றாண்மை குன்றாமை இம்மூன்றுந்
தூஉய மென்பார் தொழில்.

3. கோலஞ்சி வாழுங் குடியுங் குடிதழீஇ
ஆலம்வீழ் போலும் அமைச்சனும் – வேலின்
கடைமணிபோன் றிண்ணியான் காப்பும்இம் மூன்றும்
படைவேந்தன் பற்று விடல்.

4. தன்னை வியந்து தருக்கலுந் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும் - முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையும் இம்மூன்றுஞ்
செல்வ முடைக்கும் படை.

5. கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி கொண்டன
செய்வகை செய்வான் தவசி கொடிதொரீஇ
நல்லவை செய்வான் அரசன் இவர்மூவர்
பெய்யெனப் பெய்யும் மழை.

## அருஞ்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| 1. | தொல் | - பழமையான |
| | மாண்டார் | - மாட்சிமைப்பெற்றார் |
| 2. | நீர்ஆடி | - குளித்து |
| | சாயினும் | - அழிவதாயிருந்தாலும் |
| 3. | குடிதழீஇ | - குடிகளைத்தழுவி |
| | கடைமணி | - பூண் |
| 4. | தருக்கல் | - அகங்கரித்தல் |
| | கொன்னே | - வீணாக |
| 5. | கொண்டான் | - கணவன் |
| | கொண்டன | - தான் மேற்கொண்ட நோன்புகளை |
| | செய்வகை | - செய்யும் முறைப்படி |

# உ. இன்னா நாற்பது

இன்னா நாற்பது நூலின் ஆசிரியர் கபிலர். இவரது காலம் கி.பி. ஐம்பது முதல் நூற்றிருபத்தைந்து வரை இருக்கலாம் என்பர். இந்நூலில் கடவுள் வாழ்த்துடன் மொத்தம் 41 வெண்பாக்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு செய்யுளும் இன்னது இன்னது இன்னா என்று கூறுதலால் இதனை இன்னா நாற்பது என்று வழங்கினர்.

இன்னா என்னும் சொல்லுக்குப் பல இடத்தில் துன்பம் என்று பொருள் கூறியிருந்தாலும் சில இடங்களில் இனிமையன்று எனவும் சில இடங்களில் தகுதியன்று என்ற பொருளிலும் பயன்படுத்தியுள்ளார் இந்நூலாசிரியர்.

## இன்னா நாற்பது

1. பந்தமில்லாத மனையின் வனப்பின்னா
தந்தையில் லாத புதல்வன் அழகின்னா
அந்தணர் இல்லிருந்(து) ஊண்இன்னா ஆங்கின்னா
மந்திரம் வாயா விடின்.

2. பார்ப்பாரில் கோழியும் நாயும் புகலின்னா
ஆர்த்த மனைவி அடங்காமை நன்கின்னா
பாத்தில் புடைவை யுடையின்னா ஆங்கின்னா
காப்பாற்றா வேந்தன் உலகு

3. கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்தல் இன்னா
நெடுநீர் புணையின்றி நீந்துதல் இன்னா
கடுமொழி யாளர் தொடர்பின்னா இன்னா
தடுமாறி வாழ்தல் உயிர்க்கு

4. எருதில் உழவர்க்கு போ(கு) ஈரம் இன்னா
கருவிகண் மாறிப் புறங்கொடுத்தல் இன்னா
திருவுடை யாரைச் செறலின்னா இன்னா
பெருவலியார்க் கின்னா செயல்

5. சிறையில் கரும்பினைக் காத்தோம்பல் இன்னா
உறைசோர் பழங்கூரை சேர்ந்தொழுகல் இன்னா
முறையின்றி ஆளும் அரசின்னா இன்னா
மறையின்றிச் செய்யும் வினை

6. அறமனத்தார் கூறும் கடுமொழியும் இன்னா
மறமனத்தார் ஞாட்பின் மடிந்தொழுகல் இன்னா
இடும்பை யுடையார் கொடையின்னா இன்னா
கொடும்பா(டு) உடையார்வாய்ச் சொல்.

7. ஆற்றல் இலாதான் பிடித்த படையின்னா
நாற்றம் இலாத மலரின் அழகின்னா
தேற்றம் இலாதான் துணிவின்னா ஆங்கின்னா
மாற்றம் அறியான் உரை

8. பகல் போலும் நெஞ்சத்தார் பண்பின்மை இன்னா
நகையாய நண்பினார் நாரின்மை இன்னா
இகலின் எழுந்தவர் ஒட்(டு) இன்னா இன்னா
நயமில் மனத்தவர் நட்பு

9. கள்ளில்லா மூதூர் களிகட்கு நன்கின்னா
வள்ளல்கள் இன்மை பரிசலர்க்கு முன்இன்னா
வண்மை யிலாளர் வனப்பின்னா ஆங்கின்னா
பண்ணில் புரவி பரிப்பு

10. பொருணர்வார் இல்வழி பாட்டுரைத்தல் இன்னா
இருள்கூர் சிறுநெறி தாந்தனிப்போக்(கு) இன்னா
அருளில்லார் தங்கண் செலவின்னா இன்னா
பொருளில்லார் வண்மை புரிவு.

## அருஞ்சொற்பொருள்

பந்தம் - சுற்றம்
வனப்பு - அழகு
இல் - வீடு
நெடுநீர் - நீண்ட நீர்ப்பரப்பு
புணை - தெப்பம்
கண்மாறி - நிலையழிந்து
செறல் - சினங் கொள்ளுதல்
சிறை - வேலி
ஞாட்பு - போர்
மறம் - வீரம்
மடி - சோம்பல்
தேற்றம் - தெளிவு
பகல் - ஞாயிறு
இகல் - போர்
நாரின்மை - அன்பின்மை
களி - கள்ளுண்பவர்
பரிப்பு - சவாரி
வண்மை - ஈகை